1411.

ஞானதீப க்ஷேம பத்திரிகை

மலர் - 8 இதழ் - 10

1855

JL
Δ2:864ஞா 2.11, N48V
N55.8.10.
125384

# வைதிக தர்மவர்த்தனீ

ஆசிரியர்: ஸ்ரீவத்ஸஸோமதேவ சர்மா

643




ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயம்


மலர் 8 இதழ் 10 மன்மத ஹூ ஆடிமீ



643 3-55
OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS 3-AUG 1955 MADRAS

# வைதிக தர்ம வர்த்தனீ

यतो धर्मः  यतः कृष्णः

ततः कृष्णः ततो जयः

धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः


மலர் 8] மன்மதஹு ஆடிமீ [இதழ் 10

தனிப்ரதி 6 அணா — வருஷ சந்தா ரூ. 4.

— எட்டாம் ஆண்டு —


பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| ஆடிமீ பஞ்சாங்கம் | —289 | மாதர் பகுதி | —305 |
| ஆடி மாஸ விசேஷம் | —290 | தீர்த்தயாத்திரை | —307 |
| வேத பாஷ்யம் | —292 | க்ஷேத்ரங்கள் | —311 |
| கட உபநிஷத் | —295 | ஜீவனின் கதாகதி | —315 |
| ப்ரச்நோபநிஷத் | —298 | ஸ்திரவார வ்ரதம் | —317 |
| ஸ்ரீசங்கர உபதேச ரத்னம் | —299 | ஸ்ரீ தேவீ பாகவதம் | |
| பால பாரதம் | —303 | | 609–624 |



FOR

AYURVEDIC MEDICINES

PREPARED ON

SASTRAIC LINES

Consult

SITARAM ANGLO AYURVEDIC PHARMACY LTD.

TRICHUR

(Cochin State)

'SITARAM' TOOTH POWDER IS A SURE CURE

FOR ALL DENTAL DISORDERS.




| தமி. | ஜூலை | வாரம். | திதி | நா. வி. | நக்ஷத். | நா. வி. | யோக. | திதி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | சனி. | ஏகா. | 0- 8 | ரோ. | 48-20 | சி. | — |
| | | | த்வா | 52-23 | | | | |
| 2 | 17 | ஞா. | த்ர. | 44-13 | ம்ரு. | 42-13 | சி. | — |
| 3 | 18 | திங். | சது. | 35-55 | திரு. | 36- 0 | சி. அ. | — |
| 4 | 19 | ● செ. | அமா | 27-50 | புன. | 30- 0 | சி. அ. | அமா. |
| 5 | 20 | புதன் | ப்ர. | 20-25 | பூச. | 24-38 | சி. | ப்ர.த்வி |
| 6 | 21 | வியா. | த்வி. | 13-58 | ஆயி. | 20-20 | சி. அ. | த்ரி. |
| 7 | 22 | வெள். | த்ரி. | 8-55 | மக. | 7-25 | ம. சி. | சது. |
| 8 | 23 | சனி. | சது. | 5-28 | பூர. | 16-10 | சி. | பஞ். |
| 9 | 24 | ஞா. | பஞ். | 3-58 | உத். | 16-52 | அ. | ஷஷ். |
| 10 | 25 | திங் | ஷஷ். | 4-30 | ஹஸ். | 19-32 | சி. | ஸப். |
| 11 | 26 | செவ். | ஸப். | 6-58 | சித். | 24- 5 | சி. | அஷ். |
| 12 | 27 | புதன். | அஷ். | 11- 5 | சுவா. | 30- 3 | சி. | நவ. |
| 13 | 28 | வியா. | நவ. | 16-33 | விசா. | 37-20 | சி. | தச. |
| 14 | 29 | வெள். | தச | 22-48 | அனு. | 45- 5 | சி. ம. | — |
| 15 | 30 | சனி. | ஏகா. | 29- 0 | கேட். | 52-50 | சி. | ஏகா. |
| 16 | 31 | ஞா. | த்வா. | 35-10 | மூல. | 60- 0 | அ. | த்வா. |
| 17 | 1 | திங். | த்ர. | 40-25 | ,, | 0- 2 | சி. | த்ர. |
| 18 | 2 | செவ். | சதுர். | 44-35 | பூரா. | 6-20 | சி. | சது. |
| 19 | 3 | ○ புத. | பௌ | 47-32 | உத்தி. | 11-35 | அ. சி. | பௌ. |
| 20 | 4 | வியா. | ப்ர. | 49-15 | சிர. | 15-35 | சி. | ப்ர. |
| 21 | 5 | வெள். | த்வி. | 49-43 | அவி. | 18-23 | சி. | த்வி. |
| 22 | 6 | சனி | த்ரி. | 49- 5 | சத. | 20- 5 | அ. ம. | த்ரி. |
| 23 | ஆகஸ்ட் 7 | ஞா. | சது. | 47-28 | பூரட். | 20-43 | சி. அ. | சது. |
| 24 | 8 | திங் | பஞ். | 44-53 | உத்தி. | 20-25 | சி. | பஞ். |
| 25 | 9 | செவ் | ஷஷ். | 41-35 | ரே. | 19-15 | அ. | ஷஷ். |
| 26 | 10 | புத. | ஸப். | 37-27 | அசு. | 17-18 | ம. சி. | ஸப். |
| 27 | 11 | வியா. | அஷ். | 32-35 | பர. | 14-38 | சி. ம. | அஷ். |
| 28 | 12 | வெள். | நவமி. | 27- 3 | க்ரு. | 11-13 | சி. ம. | நவ. |
| 29 | 13 | சனி. | தச. | 20-53 | ரோ. | 7-15 | சி. | தச. ஏ |
| 30 | 14 | ஞா. | ஏகா. | 14-30 | ம்ரு. | 2-50 | சி. | த்வா. |
| | | | | | திரு. | 58- 8 | | |
| 31 | 15 | திங். | த்வா. | 7-45 | புன. | 53-20 | அ. சி. | த்ர. |
| 32 | 16 | செவ். | த்ர. | 1- 0 | பூச. | 48-45 | சி. | சது. |
| | | | சது. | 54-30 | | | | |

1, 15, 30உ ஏகாதசி. 3உ போதா அமா. 4உ அமா;
14உ வரலக்ஷ்மி பூஜை, 20உ காயத்ரீ ஜபம்; 26உ கோகுலாஷ்டமி.

**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.**

125384
சென்னை 600



# ஆடிமாஸ விசேஷம்.

தக்ஷிணாயந மாதங்களில் இது முதல் மாதம். இதை ஆஷாடமாஸம் என்பர். **1௳ தக்ஷிணாயந புண்யகால மானதால்** பித்ரு தர்ப்பணம் தாந தர்மம் முதலியவைகளைச் செய்யவேண்டும்.

இந்த மாதத்தில் வபநம் செய்துகொள்ளக் கூடாது. மாசி ஆடி புரட்டாசி மார்கழி இந்த மாதங்களில் வபநம் செய்துகொண்டால் அந்த கேசகண்டத்தைச் சாப்பிடும் படி நம் பித்ருக்களைக் கூறுவான் யமன்.

ஆடிமீ முதல் மூன்றுநாள் நதிகள் பஹிஷ்டை யாவதால் அச்சமயம் நதிகளில் ஸ்நானம் செய்யக்கூடாது. நேராக ஸமுத்ரத்தில் சேரும் மஹா நதிகளுக்கு இந்த தோஷமில்லை. ஆவணியாவட்டம் உத்ஸர்ஜநம் க்ரஹணம் ப்ரேதத்தைக் கொளுத்திய பிறகு செய்யும் ஸ்நாநம் இவைகளில் நதிகளுக்கு ரஜோதோஷமில்லை.

கோதாவரீ, பீமரதீ, துங்கபத்ரா, வேணிகா, தாபீ, பயோஷ்ணீ, பாகீரதி, நர்மதா, யமுநா, ஸரஸ்வதீ, விஶோகா, விஹஸ்தா என்ற பனிரண்டு நதிகளும் மஹா நதிகள்.

இம் மாத சுக்ல த்வாதஶியில் ஆலயங்களில் பவித்ரோத்ஸவம் செய்யவேண்டும். இது ஓராண்டு செய்த பூஜையில் குறைவிருந்தாலும் அதை அகற்றி பூர்ணமாகச் செய்யக்கூடியது. பட்டுநூல் பருத்திநூல் தாமரைநூல் வெள்ளி தங்கக் கம்பி இவைகளால் மாலைபோல் செய்து இடையில் பனிரண்டு முடியாவது அமைத்து நாபிவரை தொங்கும்படி ஸ்வாமிக்குச் சாத்தி பூஜைசெய்து பிறகு பக்தர் தரித்துக்கொள்ளவேண்டும். இதை வெகு சிலரே தரிப்பர். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் இந்த உத்ஸவம் நடக்கின்றது. ஆங்கு நெருங்கியுள்ள அந்தரங்க பக்தர் இதைத் தரிக்கிறார்கள்.

***உலக மாதா ஶ்ருதி—ஶ்ருதி மாதா காயத்ரீ.***

FOR ALL DENTAL DISORDERS.

**8௳ நாக பஞ்சமி.** அநந்தன், வாஸுகி, ஶேஷன், பத்மன், கம்பளன், கார்கோடகன், அஶ்வதரன், த்ருதராஷ்ட்ரன், ஶங்கபாலன், காளீயன், தக்ஷகன் இவர்களை அன்று பூஜிக்க வேண்டும். இவர்கள் பாதாள லோக வாசிகள். கச்யபர் கத்ரூமூலமாக இவர்களைப் படைத்தார். தேவ கார்யத்திலீடுபட்டு தேவதா ஸ்வரூபிகளாக உள்ள இவர்களைப் பூஜிப்பதால் ஸர்ப்ப பயம் உண்டாகாமலிருக்கும். நாக பூஜையால் ஸந்ததி விருத்தியாகும். ஸர்ப்ப ஶாந்தி நாகப்ரதிஷ்டை செய்து பலர் புத்ர பாக்யம் பெறுகின்றனர்.

**14௳ வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மீ வ்ரதம்.** [ஸ்ரீ ஜகத்குரு அநுஷ்டிப்பது பாரத் கணித பஞ்சாங்கம். ஆதலால் இதைத் தழுவியே நமது பத்ரிகையில் திதி வாராதிகளும் வ்ரத பண்டிகைகளும் வெளியாகின்றன.] வரலக்ஷ்மீ வ்ரதசரிதம் மஹிமை பூஜாகல்பம் எல்லாமடங்கிய தமிழ் நூல் 5-அணா ஸ்டாம்பனுப்பி குருகுலம் மாம்பலத்தில் பெறலாம்.

**20௳ வியாழன் காயத்ரீ ஜபம்.** ஆண்டிற்கு ஒரு முறை ஒரு நாள் நன்றாக நிறுத்தி காயத்ரீ ஜபம் செய்தால் ஸகலபாபங்களும் அகலும். ப்ரதிதிநமும் ஸஹஸ்ர காயத்ரீ செய்வோரை இப்போதும் பார்க்கலாம். எவ்வளவு வேலையிருந்தாலும் உரிய காலமான 8½-மணிக்கு மேல் செய்ய முடியாவிடில் அதிகாலையிலாவது அவஶ்யம் செய்ய வேண்டும். இதன் மஹிமை விதி இவைகளை உபாகர்ம நூலிலும் ஸந்த்யாவந்தந நூலிலும் காணலாம்.

**26௳ புதன் கோகுலாஷ்டமி.** கீதாசார்யன் அவதரித்த திநம். அன்று பகலெல்லாம் உபவாஸமிருந்து இரவில் பகவானை அர்ச்சித்து ஸ்ரீமத் பாகவதத்தில் அவதார அத்யாயத்தைப் பாராயணம் செய்யவும்.

## ஆடிமாதத்திய ஷண்ணவதீ ஶ்ராத்தங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1௳ | தக்ஷிணாயனம் | 4௳ | அமாவாஸ்யை |
| 6௳ | வ்யதீபாதம் | 16௳ | வைத்ருதி |
| 27௳ | ஸூர்ய ஸாவர்ணி மன்வாதி | 32௳ | வ்யதீபாதம். |

***ஆபத்திலும் அவஸரத்திலும் பத்தாவது செய்க.***

# வேதபாஷ்யம்.

## ஸ்ரீஸூக்தம்.

உடனே பலன் உண்டாக வேண்டுமென்று விரும்புபவர் பலரைக்கொண்டு ஆயிரத்தெட்டு முறையோ அல்லது முன்னூற்று முப்பத்தாறு முறையோ நூற்றெட்டு முறையோ ஹோமமும் அவ்வளவு ஜபமும் செய்ய வேண்டும்.

விதி வழுவாமல் முறைப்படி காம்ய கர்மாக்களை அநுஷ்டித்தாலும் பூர்வ கர்மா பலமுள்ளதாக இருந்தால் காம்ய பலன் கிடைப்பது தாமதமாகும். பாபகர்மா பலமாக இருந்தால் சிலஸமயம் பலன் கிடைக்காமலும் போகும். ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கரர் சரிதத்தில், ஒரு ஏழைப் பெண் வீட்டில் குரு பிக்ஷை கேட்க, அவளிடம் ஒன்றுமில்லாமல் அவள் வருந்துவதைக் கண்டு நீர் நெல்லிக்காயைக் கேட்டு வாங்கி சாப்பிட்டு கநகதாராஸ்தவத்தால் லக்ஷ்மியைத் துதிக்க அவள் "பூர்வ கர்ம பாபத்தை அனுபவிக்க வேண்டும். ஆதலால் தாங்கள் கோரியபடி இப்போது செல்வத்தைத் தரமுடியாது" என்று கூற அடுத்த பிறவியில் பூர்ண பலன் தருவது வேண்டாம். இப்போது சிறிதாவது கொடு என்று குரு கூறினர். ஒரு முகூர்த்த காலம் தங்க நெல்லிக்காய் மழை பொழிந்தது எனக் கேட்டிருக்கிறோம்.

இக் கதை "பூர்வ ஜன்ம வினையை அனுபவித்தே ஆகவேண்டும். இப்போது செய்யும் கர்மாவிற்கு மறு பிறவியில் தான் பயன்" என போதிக்கிறது. ஆதலால் காம்ய கர்மாவும் ப்ராயஶ்சித்தமும் வீணல்லவா? என்று ஸந்தேகம் தோன்றலாம். அதே தீர்மானமான ஸித்தாந்தமெனில் ப்ராயஶ்சித்த கர்மாவையும் காம்ய கர்மாவையும் சாஸ்த்ரம் வீணே கூறி இருக்குமா? ஆசார்ய கதையின் பின் பாகத்துடன் கலந்து யோசித்தால் இவைகளுக்குப் பூர்ண பலன் இல்லாவிடினும் சிறிது பலனேனும் உண்டாகும் என விளங்கும். ஜன்மாந்தர வினை





கொஞ்சமாக இருந்தால் இவை பூர்ண பலனைத் தரும் என்று ஏற்படுகிறது. ஆதலால் காம்ய பலன் கைகூடும்வரை இதைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். இப் பிறவியில் பயன் கிடைக்காவிட்டால் அடுத்த பிறவியில் நிச்சயமாகக் கிடைக்கும்.

இப் பிறவியிலேயே லக்ஷ்மியை அடைய விரும்பினுல் ஸங்கல்பம் செய்துகொண்டு பதினைந்து வருஷம் நித்யம் பதினைந்து ப்ராம்மணர்களைக்கொண்டு பதினைந்து ரிக்குகளாலும் நெய் ஹோமம் செய்யவேண்டும். பத்திற்கு ஒருமுறை ஹோமம் என்ற மதப்படி பதினைந்து பேர்களைக்கொண்டு பதினைந்து ரிக்குகளையும் பத்துமுறையாவது ஜபிக்கச் சொல்லவேண்டும். ஹோமம் ஆன பிறகும் பதினைந்து ரிக்குகளையும் பத்துமுறை ஜபிக்க வேண்டும். "ஸததம் ஜபேத்ய; ஶுசி" என்பதால் ஸதா சுத்தனுக இருந்து அர்த்தத்தையும் அறிந்து ஸதா ஜபிக்கவேண்டும். ஜபம் ஹோமம் இவைகளுடன் பூஜையும் செய்ய வேண்டும். அதிக உக்ரமான புண்ய பாபங்களுக்கு மூன்ருண்டில் மூன்றுமாதத்தில் மூன்று நாளில் கூட பலன் உண்டாகும் என்ற ஶாஸ்த்ரப்படி ஶ்ரத்தைக்கேற்றபடி ஶீக்ரமாகவோ விளம்பமாகவோ பலன் கிடைப்பது நிச்சயம். இப்படிச் செய்ய முடியாதவர் ஸதா ஜபமாவது செய்தால் கிஞ்சித் பலன் உண்டாகும்.

पद्मानने पद्मऊरू पद्माक्षी पद्मसंभवे ।

तन्मे भवसि पद्माक्षी येनसौख्यं लभाम्यहम् ॥

பத்மாநநே பத்மஊரூ பத்மாக்ஷீ பத்ம ஸம்பவே * தன்மே பவ(ஜ)ஸி பத்மாக்ஷீ யேந ஸௌக்யம் பஜாம்யஹம்.

* தன்மே பஜஸி என்றொரு பாடமுண்டு.

பத்மாநநே —தாமரை போன்ற முகமுள்ளவளே
பத்ம ஊரு —தாமரை போன்ற துடையுள்ளவளே
பத்மாக்ஷீ —தாமரை போன்ற கண்ணுள்ளவளே
பத்மஸம்பவே —தாமரையில் பிறந்தவளே

யேந —எப்படி (எதனுல்)
அஹம் —நான்
ஸௌக்யம் —ஸௌக்யத்தை
லபாமி —அடைவேனே
தத் —அப்படி
மே —என்னை
பத்மாக்ஷீ —லக்ஷ்மியே
பஜ(வ)ஸி —அருள்புரியவேண்டும்.

ஓ மஹாலக்ஷ்மி ! உனது முகமும் தொடையும் கண்ணும் தாமரை புஷ்பம்போலிருக்கிறது. நீயும் தாமரையிலேயே பிறந்தாய். நான் ஸௌக்யமாக இருக்கும்படி நீ அருள்புரிய வேண்டும். ஸம்பத் இருந்தாலே துக்கங்களை அகற்றி ஸுகத்தைப் பெறலாம். நீ மஹாலக்ஷ்மியானதால் ஸகல விதமான ஸம்பத்தையும் தந்து ஸுகத்தையும் உண்டுபண்ணுவாய். ஆதலால் உனது அருளை வேண்டுகிறேன்.

**अश्वदायी गोदायी धनदायी महाधने**

**धनं मे जुषेतां देवी सर्वकामांश्च देहिमे ॥**

† அஶ்வதாயீ கோதாயீ தநதாயீ மஹாதநே, தநம்மே ஜுஷதாம் தேவி ஸர்வ காமாம்ஶ்ச தேஹிமே.

† அஶ்வதாயை கோதாயை தநதாயை என்றும் பாடமுண்டு.

அஶ்வதாயீ —குதிரையைத் தருபவளே
கோதாயீ —பஶுவைத் தருபவளே
தநதாயீ —தநத்தைத் தருபவளே
மஹாதநே —நிறைந்த செல்வமுள்ளவளே
தேவி —ஓ லக்ஷ்மீ தேவியே
மே —எனக்கு
ஸர்வகாமாம்ஶ்ச் —விரும்பிய எல்லாவற்றையும்
தேஹி —கொடு.

---

**காயத்ரீ அளிக்கும் பாக்யம் அழிவற்றது.**

# 3. கட உபநிஷத்.

## ஆருவது வல்லி.

இந்த்ரனும் வாயுவும் அவரவர் கடமையைச் செய்கின்றனர். ஐந்தாவதான யமனும் பயத்தினுல் ஓடுகிருர்.

இந்த நமது உடல் அழிவதற்குமுன் அந்த பரப்ரும்மத்தை அறிய சக்தி இல்லாதவன் பூலோகம் முதலிய உலகங்களில் அடிக்கடி சரீரத்தை எடுக்கிருன்.

ஆத்மாவை அறியாதவன் பிறந்து பிறந்து இறப்பான். கண்ணுடி அழுக்குள்ளதாயிருந்தால் அல்லது பூதங்காட்டுவதாலுல் நம் முகம் அதில் நன்ருகத் தெரிவதில்லை. அதேபோல் ஆத்ம ஸ்வரூபம் எளிதில் புலனுவதில்லை. ஸ்வப்நத்தில் காணப்படும் விஷயம் வாஸ்தவமானதல்ல. அதேபோல் பித்ருலோகத்திலும் ப்ரும்ம ஸ்வரூபம் ஸ்பஷ்டமாகத் தெரிவதில்லை. ஜலத்தில் நமது முகம் ஸ்பஷ்டமாகத் தெரிவதில்லை. அதேபோல் கந்தர்வ லோகத்திலும் ப்ரும்ம லோகத்திலும் ஆத்மா அறியப்படுவதில்லை. இது நிழல் இது வெய்யில் என்பதுபோல் இது ஆத்மா, இது ஆத்மா அல்லாதது என்று தெரிந்து கொள்வது கஷ்டம்.

இவ்வுடலில் இந்த்ரியங்கள் தனித்தனியாக உண்டாகின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் மிக்க பேதமுண்டு. இவைகளுக்குக் காரணமான உடலே ஒரு ஸமயம் உண்டாகும். ஒரு ஸமயம் அழியும் என்ற இந்த தத்துவத்தை அறிந்த தீரன் ஸம்ஸார துக்கத்தை அனுபவிப்பதில்லை.

இந்த்ரியங்களைவிட மநம் உயர்ந்தது. மநதைவிட புத்தி உயர்ந்தது. புத்தியைவிட ஜீவன் பெரியது. ஜீவனைவிட அவ்யக்தம் பெரியது.

அவ்யக்தத்தைவிட புருஷன் சிறந்தவன். அவன் எங்கும் பறவி இருப்பவன். அநுமாநம் முதலியவைகளால் அறியமுடியாதவன். அந்த புருஷனை அறிந்தவன் பந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைவான்.

---

**தந்தை தாயளித்த உடல் ஒரு நாள் அழியும்.**

அந்த புருஷனுடைய ரூபம் கண்ணுக்குத் தெரியாது, எவரும் அவரைக் கண்ணுல் பார்ப்பதில்லை. பக்தியும் தைர்யமும் உள்ள அறிவால் அறியப்படுவான். அவனைக் கண்டவர் முக்தர் ஆவர்.

மநதும் பஞ்சேந்த்ரியங்களும் சேர்ந்து எப்போது அசையாமல் இருக்கின்றனவோ புத்தியும் சலிக்காமல் இருக்கிறதோ அப்போது அந்த நிலையைச் சிறந்த கதி என்பர்.

அந்த ஸ்திரமான இந்த்ரியதாரணையை யோகமென்பர். அச்சமயம் யாதொரு தவறுதலும் தோன்ருது. அந்த யோகம் அநிஷ்டத்தை அகற்றி இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதாகும்.

வாக்கினுலோ மநதினுலோ கண்ணினுலோ அந்த ஆத்மாவை அடையமுடியாது. ஆத்மா இருக்கிறது என்று கூறி நம்புவதைத் தவிர வேறு எந்த வகையில் அதை அடையமுடியும்? ஆத்மா இருக்கிறுன் என்று அறிவினுல் தான் ஆத்மாவை அடையலாம். அப்படி அறிபவனுக்கே மநம் தெளிந்து ஆத்ம அனுபவம் ஏற்படும்.

மநதில் உண்டாகும் எல்லா வகையான ஆசைகளும் அறவே அழிந்தபின் மநிதன் மரணமில்லாதவனுக ஆகிறுன். இங்கேயே அவன் ப்ரும்மாநந்தத்தை அனுபவிக்கிறுன்.

ஹ்ருதயத்தில் இருக்கின்ற ஸம்மயம், ஆமை முதலிய முடிச்சுகள் அறுபட்டுப் போனவுடன் மரிக்கும் தன்மை வாய்ந்த மனிதன் மரணமற்றவனுகிறுன். இவ்வளவுதான் வேதம் கூறும் உபதேசம்.

நூற்றேருரு நாடிகள் ஹ்ருதயத்தில் சேர்ந்திருக்கின்றன. அவைகளுக்குள் ஒரு நாடியானது மூர்த்தாவை நாடிச் செல்கிறது. அந்த வழியாக மேலே செல்பவன் முக்தி அடைகிறுன். மற்ற நாடிகள் பலவகையாகச் செல்பவைகள்.

மேல் செல்லும் அதை ஸுஷும்நா நாடி என்பர். அந்த வழியாக ப்ராணன் சென்றுல் ப்ரும்ம லோகம் சென்று க்ரம முக்தி அடையலாம்.

---





ஆத்மா ஸர்வ ஜநங்களிடமும் எப்போதும் ஹ்ருதயத்தில் அங்குஷ்ட மாத்ரனுக இருக்கிறுன். மேலே இருக்கும் போர்வை போன்றதைத் தள்ளி உள்ளே இருக்கும் ஈர்க்கை எடுப்பது போல் அநாத்மாவான உடலிலிருந்து உடல் ஆத்மா அல்ல என்று தள்ளி ஆத்மாவை உருவி எடுக்கவேண்டும். அந்த ஆத்மாவே ஶுத்தன் அம்ருத ஸ்வரூபி என்று அறிய வேண்டும்.

[துடப்பம் நமக்குக் கிடைக்கிறது. வாழைப்பட்டை போல் இந்த துடப்பத்திற்கு மேல் தலைகணிக்கு உரை இருப்பதுபோலும் ஒருவகை போர்வை இருக்கிறது. அதிலிருந்து ஈர்க்கை இழுத்து நமக்குத் துடப்பமாகக் கட்டித் தருகிறுர்கள். அதேபோல் பஞ்சகோஶவடிவமான இந்த உடலிலிருந்து ஆத்மாவைத் தனியாகப் பிரித்து அறிய வேண்டும் என்பது அதன் கருத்து.]

ம்ருத்யுவினுல் கூறப்பட்ட இந்த வித்யையையும் பரிபூர்ணமான யோகத்தையும் அடைந்து நசிகேதன் அவித்யை மரணம் முதலியவைகளை விட்டு மோக்ஷத்தை அடைந்தான். இங்ஙனம் இந்த வித்யையை உபாஸிக்கும் மற்றவரும் ஆத்ம ஸ்வரூபத்தை அடைவர்.

## உத்தர ஶாந்தி.

ஶுத்த பரமாத்மா குருவும் சிஷ்யருமான நம் இருவரையும் ரக்ஷிக்கட்டும். இருவரும் கூடியிருக்கும்படி பரிபாலிக்கட்டும். நாங்கள் இருவரும் கூடி வீர்யம் பலம் உள்ளவர்களாக இருக்கிறேரும். எங்களிடம் உள்ள அத்யயநம் சிறப்புள்ளதாக இருக்கட்டும், இருவரும் த்வேஷமில்லாமல் இருக்கவேண்டும். ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதி தெய்விகமான துன்பங்கள் ஶமநம் அடையட்டும்.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:

கடோபநிஷத் முற்றிற்று.

---

# 4. ப்ரச்னோபநிஷத்.

பத்ரம் கர்ணேபி: என்று இதற்கு சாந்தி. ஓ! இந்த்ராதி தேவர்களே! ஶ்ருதிஸ்ம்ருதி வாக்யரூபமான மங்களத்தைக் குரு சிஷ்யர்களான நாங்கள் காதுகளால் கேட்கவேண்டும். யக்ஞாதிகர்மாக்களைச் செய்யும் நாங்கள் கண்களால் உத்தம கர்மாக்களைப் பார்க்கவேண்டும். ஸ்திரமான அங்கமுள்ள உடலால் உமது ஸ்துதியைக் கூறவேண்டும். ப்ரும்மா அளித்த ஆயுளைப் பூர்ணமாக அனுபவிக்கவேண்டும். பெரியோரால் போற்றப்படும், இந்த்ரன் எங்களுக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும். எல்லாம் அறிந்த பூஷாவும் அஹிம்ஸையை முக்ய தர்மமாகக் கொண்ட கருடனும் ப்ருஹஸ்பதியும் எங்களுக்கு க்ஷேமத்தைத் தரட்டும்.

ஓம் ஶாந்தி; ஶாந்தி; ஶாந்தி; என்பது ஶாந்தியாம்.

---

[சிஷ்யர் கேள்விகளைக் கேட்க குரு பதில் கூறுவதாக அமைந்திருப்பதால் இது ப்ரஶ்ந உபநிஷத் என பெயர் பெற்றது இது அதர்வ வேதத்தைச் சார்ந்தது. பாரத்வாஜர் ஸத்யகாமர் கார்க்யர் ஆஶ்வலாயனர் பார்க்கவர் காத்யாயநி என்பவர் பிப்பலாதர் எனும் முனிவரைப் பணிந்து வேதாந்த விஷயமாக பல கேள்விகளைக் கேட்க அவர் தக்க பதில் கூறுகிறார். ஆறு ப்ரஶ்னம் இதில் இருக்கிறது. ஸ்ரீமத் ஆசார்ய பாஷ்யத்தைத் தவிர ஸ்ரீ சங்கரானந்த யதீந்த்ரர் ப்ரஶ்னோபநிஷத் தீபிகா என ஒரு வ்யாக்யானம் எழுதி இருக்கிறார்கள். சிஷ்யர்கள் குருவைப் பணிந்து ஸந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஸம்ப்ரதாயத்தை எல்லோரும் கைப்பற்றவேண்டும் என்பதற்காக ஶிஷ்யர்கள் பெயரையும் குருவின் பெயரையும் உபநிஷத் முதலில் கதையாகக் கூறுகிறது.]

---

**காயத்ரீ மாத்ரம் செய்தாலும் ப்ராம்மண்யம் நிற்கும்**

# ஸ்ரீ சங்கர உபதேச ரத்னம்.

## ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்க்ரஹம்.

ஜனனம் உண்டானால் மரணம் உண்டு. மரித்தவர் வேறு உடல் எடுப்பதும் நிச்சயம். ஆதலால் பிறவியில் உள்ளதோஷத்தை நன்றாகக்கவனித்தால் பிறப்பில்லாமலிருக்க வழிதேடுவாய். ஜனனமரணத்தில் வெறுப்பு உண்டாகும்.

தனிகனாயினும் ஏழையாயினும் எல்லோரும் தாய் வயிற்றில் பத்துமாதகாலம் தங்கவேண்டும். கருவிலுள்ள குழந்தையைச் சுற்றி மலம் மூத்ரம் நிறைந்திருக்கிறது. அதில் பல புழுக்கள் இருந்து பச்சைமண்ணான குழந்தை உடலைக் கடிக்கிறது. தாய் வயிற்றிலுள்ள ஜாடர அக்நி ஒருபுறத்தில் கொளுத்துகிறது. அச்சமயம் உணர்ச்சி இருப்பதால் கருவில் வஸிக்கும் குழந்தை படும் கஷ்டம் செப்பத்தரமன்று. வயதானபின் நமக்கு அத்தகைய துன்பம், — அதாவது மலஜலமும் தீயும் நிறைந்த இடத்திலே ஈ கொசு புழுக்கள் கடிக்க துர்நாற்றம் வீச வஸிக்கும்படி நேர்ந்தால், — கொசு ஈ புழுக்களை ஓட்டலாம். துர்வாஸனை இல்லாத இடத்திற்கு எழுந்து செல்லலாம். அல்லது மூக்கையேனும் பிடித்துக்கொள்ளலாம். கருவில் உள்ளபோது இப்படி செய்யமுடியுமா? ஆதலால் 'கர்ப்பவாஸம் மிகக் கஷ்டமானது. அது இல்லாத வழியைத்தேடவேண்டும்.

குழந்தை அழகானது. ப்ரியமானது. இளமைக்கே ஒரு தனியான சிறப்புண்டு. குழந்தை தெய்வத்திற்கு ஸமமானது. இளமையில் கழுதைக்குட்டி கூட அழகாக இருக்கும். நாமும் எத்தனையோமுறை எத்தனையோ ஜன்மாவில் குழந்தையாக இருந்திருக்கிறோம். ஆதலால் அதனிடம் நமக்கு ஆசை உண்டாவது ஸஹஜம். ஆனால் நன்றாக குழந்தை பருவத்தில் உள்ள தோஷத்தை யோசி. அதிலும் உனக்கு வெறுப்பு உண்டாகும்.

---

**அரிது அரிது மானிடர் ஆதல் அரிது.**

குழந்தைக்குப் பசி. உணவு கொடு என்று கேட்கத் தெரியாது. வயிற்றை வலிக்கிறது, என்று சொல்லத் தெரியாது. பசித்தாலும் வலித்தாலும் ஒரே அழுகையாக அழும். வயிறு வலித்தபோது குழந்தைக்குப் பசி என்று உணவு ஊட்டுவர். பசித்தபோது ஏதேனும் மருந்தை அளிப்பர். பசித்தபோது பால் ஊட்டினாலும் அதைப் புஜித்தால் பசி ஆறும் என அறியாமல் அழும். கைகால்களை அமுக்கிப் பல் உடையப் பாலாடையால் பால் புகட்டுவர். மலமிது என்று அறியாமல் தன் மலத்தைத் தானே எடுத்து உண்ணும் ஒரு குழந்தையை நினைத்துப் பார். உடலெல்லாம் மலத்தைப் பூசிக்கொண்டிருக்கும் குழந்தை நிலையை கவனி. அப்படியே அதை ஆலிங்கனம் செய்து கொள்வாயா? மூக்கு ஒழுக வாய் சொள்ளு பெருக, உடலெல்லாம் சிறங்கு சொறியால் துர்க்கந்த ஜலம் உண்டாகி நாற்றமெடுக்க மலத்தின்மேலே படுத்து புரளும் குழந்தை உடல் ஒரு அழகா?

குமாரத்தன்மை தனக்கும் தெரியாது பிறர் சொல்வதையும் கேளாத காலம். தன்பந்துக்களாலும் பிறராலும் அடிபடுங்காலம்! மிக்க சபல புத்தி உள்ளகாலம்! நல்லது கெட்டது தெரியாத காலம்! ஆடி ஓடி விளையாடி விபரீதமான வேலைகளைச் செய்யுங்காலம்! அந்த கௌமார காலத்தில் தான் இன்பமுண்டா?

யௌவநம் உண்டானபோது ஒரு காரணமுமில்லாமலே கர்வம் உண்டாகும். காரணமின்றி பெரியோரை அவமதிப்பான் யுவா. காமாதுரனாக இருப்பான். பெரியோருக்கு அடங்கி நடக்கமாட்டான். மனைவி இட்டவேலையைச் செய்வதே புருஷார்த்தமென மதிப்பான். அவளுக்கு அடிமையாகி அவள் ஆட்டி வைத்தபடி ஆடுவான். அதை நன்றாக யோசித்துப்பார்த்தால் யாருக்குத்தான் அதில் வெறுப்பு வராது. கிழத்தனம் இவைகள் எல்லாவற்றையும்விட மோசமானது. சதை சுருங்கும். பல் விழும். கன்னங்களில் பள்ளம் விழும். கண் குழிவிழும். முதுகு வளைந்து கூன்விழும். கண் தெரியாது. காது கேட்காது. நடக்க சக்தி இராது. ஆனால் கண்ட இடத்





திற்குச்செல்லவேண்டுமென அவா உண்டாகும். உண்ண ஆசை. ஆனால் ஜிர்ணமாகாது. வம்பு பேச ஆசை. ஆனால் பேசுவார் இரார். எல்லோருக்கும் உபதேசம் செய்ய ஆசை. ஆனால் ஒருவரும் மதிக்கமாட்டார். உட்கார்ந்தால் படுக்கத்தோன்றும். படுத்தால் உட்காரத் தோன்றும். பிறர் உதவிஇன்றி ஒன்றும்செய்யமுடியாது. அடிக்கடி அழைத்தால் மனைவிகூட நெச்சறிக்காதே என்பாள். முன்கூறியது மறந்துவிடும். சொன்னதையே சொல்வான். இத்தகைய கிழத்தனத்தை யோசித்தால் உடலில் ஆசை உண்டாகுமா?

இறக்கும்போது யமதூதர் நம் கண்ணில் படுவர். அவர் பயங்கரமான ஆயுதங்களை ஏந்தி க்ரூரமான சொற்களைக் கூறி ஹிம்ஸிப்பர். பயங்கரமான முன் பின் அறியாத இடத்திற்கு இழுத்துச் செல்வர். மனைவி மக்களை வீட்டைப் பொருளை விட்டுச்செல்ல மநமின்றி வருந்தும் நிலையைக் கவனித்தால் வாழ்க்கையில் வைராக்யம் தோன்றாதா?

மிக உஷ்ணமான ஜலம்! ஒரே துர்க்கந்தம்! பலவகையான ஜலஜந்துக்களின் கடி. இவ்வளவு துன்பம் உள்ள வைதரிணீ நதியைத் தாண்டித்தான் ஸம்யமிநீ என்ற யமநகரம் செல்ல வேண்டும். ப்ரேத ஜன்மா அகல புத்ரன் கர்மா செய்யாவிடில் ப்ரேத ரூபியாகவே அலையவேண்டும். அதற்கு ரக்தமும் சீயுமே ஆஹாரம், போதுமா துக்கம்?

அஸிபத்ர வநத்தின் வழியே இழுத்துச் செல்வர் கிங்கரர். ஒவ்வொரு இலையும் கூரிய கத்திபோல் உடலை வெட்டும். கும்பீபாகம், காலஸூத்ரம், ரௌரவம் மற்ற நரகங்களில் பிறர் படும் துன்பத்தைப் பார்த்தாலே இனி நமக்கு ஜநநம் வேண்டாம் என்று தோன்றுமே! நாமே நரகஞ் சென்றால்?

புண்யம்செய்து ஸ்வர்க்கலோகம் சென்றாலும் சிறிது காலமே ஸுக அனுபவம். புண்யம் முடிந்தவுடன் மறுபடியும் பூமிக்குத் தள்ளும்போது ஸந்திபந்தங்கள் எல்லாம்

முறியும். நக்ஷத்ரரூபமாக ஜலத்தில் விழுந்து செடியின் ஜீவனுடன் ஒட்டிக்கொண்டிருந்து அதை உண்ணும் புருஷனிடம் சென்று யோநி வழியாகத் தாய் கற்பத்தில் புகும் நிலையை யோசித்தால் ஜன்மா வேண்டுமா ?

புண்ய கர்மாக்களைச் செய்து ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய முக்தியை அடைந்தாலும் கர்மாவினால் உண்டாவதெல்லாம் அழியுமானதால் அதற்கும் அங்குள்ள தேவர்க்கும் கூட அழிவு மரணம் உண்டாவதால் எந்த லோகம் போனாலென்ன ? மறுபடியும் பூமிக்குத்தானே வரவேண்டும்.

அத்திப் பழத்தை மேலே பார்த்தால் அழகாகத்தான் இருக்கும். உடைத்து உள்ளே பார்த்தால் ஒரே புழுவாக இருக்கும். அதேபோல் உள்ளே புகுந்து பாராமல் இருந்தால் மனைவி மனை மற்றதெல்லாம் மகிழ்ச்சியைத் தரும். நமது உழைப்பைப் பெற்றுக்கொண்டு சளைத்த காலத்தில் நம்மை அவர் அலக்ஷயம் செய்வதையும் கேவல சுயநலக்காரர்களாக இருத்தலையும் கவனித்தால் நாம் வீண் ப்ரமப்பட்டோம் எனத் தெரியும். ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஆநந்தம் அக்ஞானத்தால் உண்டானதாம். குளத்தில் உள்ள ஜலம் வரண்டுவிட்டாலும் வளைக்குள் புகுந்துகொண்ட நண்டு வெளியில் வராமல் அதற்குள்ளேயே இருந்து ப்ராணனை விடும். அதேபோல் மனைவி மக்கள் இவனை மதிக்காவிட்டாலும் கைவிட்டாலும் அக்ஞானத்தால் ஸம்ஸாரத்தில் உழண்டுமாளுவான். ஐயோ ! கஷ்டம் !! கஷ்டம் !!

பட்டுப் பூச்சி தன்னை ரக்ஷித்துக் கொள்வதற்காக தனக்குமேல் தானே நூலைப் பலமாகப் போர்த்துக்கொள்ளும். முடிவில் அதிலிருந்து வெளிவர முடியாமல் உள்ளேயே இருந்து இறக்கும். அதேபோல் மனிதன் தன்னைக் காத்துக்கொள்வதற்காக வீடு மனைவி உற்றார் உறவினர் அனைவரையும் சேர்த்துக்கொண்டு ஒரு நிமிஷம் தன்னிஷ்டப்படி வெளியில் வர முடியாதபடி அழிகிறான். பாவம் !



# பால பாரதம்.

## ஜராஸந்தன் வதம்.

ப : யுத்தத்தை மாத்ரம் யாசிக்கலாம். பொருளை, மற்றதை யாசிக்கக்கூடாது.

கே : எப்படி யுத்தத்தை யாசித்தார் ?

ப : எங்கள் மூவரில் ஒருவருடன் மாத்ரம் யுத்தம் செய்யவேண்டும் என யாசித்தார்.

கே : அவன் இவர்களில் யாரைத் தேர்ந்தெடுத்தான் ?

ப : பீமனையே விரும்பினான்.

கே : மற்றவர்களை ஏன் விரும்பவில்லை ?

ப : இன்னாரென்று தெரிந்துகொண்டு பலமுறை தன்னிடம் பயந்து ஓடியதால் க்ருஷ்ணன் வேண்டாம். சிறியவனாக இருப்பதால் அர்ஜுநனும் வேண்டாம் என்று பீமனையே அழைத்தான். உடனே தன் புத்ரனான ஸஹதேவனுக்கு ராஜ்யத்தைத்தந்து போருக்குக் கிளம்பினான்.

கே : போரில் தனக்கு ஜயம் உண்டாகாது. இறப்பேன் என்று நினைத்தானா ?

ப : க்ருஷ்ணன் வந்திருக்கிறார். ராஜஸூயம் நடத்தி வைக்கப்போகிறார். போரிலோ ஜயம் அபஜயம் யாருக்கும் நிச்சயமில்லை. ஆதலால் புத்ரனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவந்தான்.

கே : யுத்தம் இருவருக்கும் நடக்கும்போழுது க்ருஷ்ணனும் அர்ஜுநனும் பார்த்துக்கொண்டுதானிருந்தார்களா ? ஏதேனும் ஸஹாயம் செய்தார்களா ?

ப : சரீரத்தால் ஸஹாயம் செய்யவில்லை. வாக்காலும் மநதாலும் ஸஹாயம் செய்தனர்.

கே : அதெப்படி ? விவரித்துக்கூறு.

ப : பீம ! உன்னால் தான் அவனுக்கு மரணம். அவனோ களைத்து வருகிறான். விரைவில் அவனைக்கொல்.

உன்பிதா வாயு உனக்கு பலம் அளிப்பார். என்று கூறி பகவான் மற்றொரு ஜாடையும் செய்தார்.

கே: அதென்ன ஜாடை?

ப: இரு கிளையுள்ள சிறிய ஒரு கொம்பைக்கிழித்து ஒன்றின் தலைப்பக்கம் மற்றொன்றின் அடிபாகத்தையும் மற்றொன்றின் அடிபாகத்தில் மற்றொன்றின் தலைபாகத்தையும் மாற்றிப்போட்டார்.

கே: அதன் கருத்தென்ன?

ப: ஜராஸந்தனை இருபகுதியாகக் கிழித்து இப்படி எறிந்ததால்தான் அவன் இறப்பான் என்பதே அதன் பொருள்.

கே: அப்படியே அவனைக் கொன்றிருப்பான். அவன் பிள்ளை பீமனுடன் போரிடவில்லையா?

ப: ஜராஸந்தனது புத்ரனை ஸஹதேவன் பகவானிடம் பக்தி கொண்டவன். அவனை ராஜாவாக்கி க்ருஷ்ணன் பாண்டவருடன் அஸ்தினபுரம் வந்தார்.

கே: யாகம் நடக்கும்வரை க்ருஷ்ணன் அங்கிருந்தாரா?

ப: இல்லை. வ்யாஸரும் தௌம்யரும் மேலே நடக்க வேண்டியதைக் கவனிப்பர் என்று கூறி த்வாரகைக்குச் சென்றார்.

கே: வ்யாஸரும் தௌம்யரும் மேலே என்ன ஏற்பாடு செய்தனர்.

ப: அர்ஜுனனை வடக்கு திக்கிலும் பீமனைக் கிழக்கு திக்கிலும் ஸஹதேவனை தென்கிழக்கிலும் நகுலனை மேற்கு திக்கிலும் சென்று அரசர்களை ஜயித்துக் கப்பம் வாங்கி வரும்படி சொன்னார்கள்.

கே: வடதிக்கிற்கு அர்ஜுனனை அநுப்ப ஏதேனும் காரணம் உண்டா?

ப: வடக்கே தெய்வாம்சம்பெற்ற அர்ஜுனன் போனால் தான் கிம்புருஷர் முதலியவர்களை ஜயிப்பார் என யோசனை செய்து வ்யாஸர் அவனை அனுப்பினர்.

**காயத்ரியால் ஸகல நன்மைகளையும் பெறலாம்.**

# மாதர் பகுதி.

## ஸ்ரீ விஷ்ணு கவசம்.

**यत्र यत्रेच्छा तत्र तत्र उपजायते.**

யத்ர யத்ரேச்சா தத்ர தத்ர உபஜாயதே.
எங்கெங்கு விருப்பமோ அங்கங்கு தோன்றும்.

**स्मरति चात्मानम्.**

ஸ்மரதி சாத்மாநம்.
ஆத்மாவை அறிவான்.

**भगवान् महाविष्णुरित्याह.**

பகவான் மஹாவிஷ்ணு ரித்யாஹ.
பகவான் மஹாவிஷ்ணு இப்படிக் கூறினார்.

**इति विष्णु हृदयम्.**

இதி விஷ்ணு ஹ்ருதயம்.
என்பதே விஷ்ணு ஹ்ருதயம்.

விஷ்ணு ஹ்ருதயம் முற்றிற்று.

## பதிஸஞ்ஜீவநி வ்ரத கதை.

தர்மராஜன் ஸ்ரீ க்ருஷ்ணரை வணங்கி பெண்கள் தனது பர்த்தா சிரஜீவியாக இருப்பதற்கும் வரக்கூடிய ஆபத்துகளிலிருந்து தப்பிக்கவும் என்ன வ்ரதம் செய்ய வேண்டும் என்று கேட்டார். பகவான் பதிஸஞ்ஜீவநி வ்ரதத்தைக் கூறி அதன் மஹிமையை விளக்க ஒரு கதையையும் சொன்னார்.

தர்ம! இந்த வ்ரதத்தை ருக்மிணி செய்துவருகிறாள். தான் ஸுமங்கலியாக இருப்பதற்காகவும் நீ சிரஜீவியாக இருப்பதற்காகவும் உனது பகைவர் இழைக்கும்

**உபதேசமான எதையும் விடக் கூடாது.**

ஆபத்துகளிலிருந்து மீளவும் இந்த வ்ரதத்தை த்ரௌபதி அநுஷ்டிக்கும்படிச் செய்.

ஸோமபர் என்றொருவர் இருந்தார். அவருக்கு இரு மனைவிகள். இளையவளுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவள் பார்வதியைப் பூஜித்து அவளருளால் ஒரு கன்யகையைப் பெற்றாள். அவளுக்கு ஸஞ்ஜீவநீ எனப் பெயரிட்டார். எட்டு குழந்தைகளையும் இரு மனைவிகளையும் ரக்ஷிக்கப் போதிய தநமின்றி வருந்தினார் ஸோமபர். அதே ஸமயத்தில் கார்த்திகவர்மா என்ற அந்த தேச அரசனுக்கு காளிங்கவர்மா என்றொரு புத்ரன் பிறந்தான். அவன் பதினாறு வயது வளர்ந்தான். அவனுக்கு மணம் செய்துவைக்க பெற்றோர் ஆவலுடன் முயற்சி செய்து வந்தனர். திடீர் என காளிங்கவர்மன் இறந்துவிட்டான். பெற்றோர் ஏக புத்ரன் இறந்ததைக் கண்டு ஆராத் துயரம் அடைந்தனர். சவத்திற்கேனும் மணம் செய்து பார்ப்போம் என ஆசைகொண்டு பெண்ணைத் தேடினர்.

பிணத்திற்கு யார் பெண் தருவர்? பணத்திற்காக பிணத்திற்கும் பெண்கொடுக்க எவரேனும் முன்வர மாட்டாரா? என இறந்த காளிங்கவர்மனை மணப்பவர்க்கு லக்ஷம் ஸாவரன் தருவதாகக் கூறினான். இதைக் கேட்ட பரம ஏழையான ஸோமபர் என்றவர் தனது ஒரே பெண்ணான ஸஞ்ஜீவநியை அளித்து அந்த தநத்தைப் பெற விரும்பினார். தாய் தனது பெண், சவத்தை மணந்து விதவையாகி உடனே உடன்கட்டை ஏர விரும்புவளா? எனினும் பதியின் கருத்திற் கிசைந்து பெண்ணை அளித்தாள். ஏதோ பெயருக்கு அரசன் விருப்பத்திற்காக பிணத்திற்கு மணம் நடந்தது. உடனே சவத்தை விதிப்படி கொளுத்த கங்கைக்கரைக்கு எடுத்துச் சென்றான். கரைபுரண்ட வெள்ளம். கடுமையான காற்றும் மழையும் தோன்ற சவத்தைத் தக்க காவலுடன் அங்கே வைத்துவிட்டு மறுநாள் காலையில் தீயிடலாமென அரசனும் மற்றோரும் ஊருக்குச் சென்றனர். ஸஞ்ஜீவநி மாத்ரம் பதிவ்ரதா தர்மத்தை மநதில் கொண்டு கணவன் உடலின் அருகே அமர்ந்து பார்வதீ தேவியைப் போற்றி வணங்கினாள்.

**மறந்தால் குருத்ரோஹம். ப்ரும்ம ரக்ஷஸாவான்.**

# தீர்த்த யாத்ரை.

## ப்ரயாக மஹிமை.

சௌளம் என்ற கர்மாவில் வேதோக்த மந்த்ரங்களைக்கூறி வைத்த கேஶத்தைத் தவிர இருகரங்களிலும் கணுக்கைக்குமேலே முழங்கையில் முன்னும் பின்னும் முதுகும் தவிர மற்ற இடங்களில் உள்ள கேசத்தையும் ரோமத்தையும் க்ருஹஸ்தன் மாஸத்திற்கு ஒருமுறை க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். பங்காளிகள் இறந்தால் பத்தாவது நாள் க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். பித்ரு மாத்ரு தீக்ஷை விவாஹ தீக்ஷை கர்ப்ப தீக்ஷை தவிர மற்ற காலங்களில் காரணமின்றி மயிரை வளர்க்கக் கூடாதென்று தர்மசாஸ்த்ரம் கூறுகிறது. ஏழு தாதுக்களிலுமிருந்து கேசத்தில் வரும் பாபத்தை அப்போதைக்கப்போது அகற்றவே வபநம் கூறப்பட்டது. அதேபோல் தீர்த்த யாத்ரைக்குச் செல்பவரும் அங்கு பித்ருக்களுக்கு ஶ்ராத்தம் செய்வதற்குமுன் பாபத்தை அகற்றிக்கொள்ள வபநம் செய்து கொள்ள வேண்டும்.

இது புருஷர்களுக்கேற்பட்ட விதி. ஸ்த்ரீகளுக்கும் அப்படி பாபம் கேசத்தை அண்டி இருந்தாலும் கணவன் செய்துகொள்ளும் வபநத்தாலும் மற்ற புண்யத்தாலும் அவர்கள் பாபமும் அகலும். புருஷனில்லாத பெண்களின் பாபத்தை அகற்ற ஸன்யாஸிகளைப் போல் விதவைகளுக்கும் வபநம் கூறப்பட்டிருக்கிறது. ப்ரயாகத்தில் மாத்ரம் தனிவிதி. ஸுமங்கலிகளும் கேசத்தை வபநம் செய்துகொள்ளவேண்டும். ஆனால் எக்காரணம் கொண்டும் ஸுமங்கலிகள் கேசத்தை வபநம் செய்துகொள்ளக் கூடாது என்றும் சாஸ்த்ர விதி கூறுகிறது. இப்படி ஒன்றுக்கொன்று முரண்போல் உள்ள இடங்களில் ஸமரஸமர்க மஹர்ஷிகள் வழிகாட்டுவர்.

தந்தை இருக்கும்போது புத்ரன் ஜீவபித்ருகன் எனப்படுவான். க்ஞாதி இறந்த ஆஶௌசத்தில் ஜீவபித்ருகன் வபநம் செய்துகொள்ளக் கூடாது. மனைவி கர்ப்பமாக

**காலத்தில் 10 காயத்ரீ செய்யவா அவகாசமில்லை?**

இருக்கும்போது எந்த காரணத்தைக் கொண்டும் கர்ப்பிணி பதி வபநம் செய்துகொள்ளக் கூடாது. ஆனால் கர்ப்பிணி பதியுங்கூட ப்ரயாகத்தில் வபநம் செய்து கொள்ளவேண்டும்.

### ப்ரயாக மாகஸ்நாநம்.

ப்ரயாக ஸ்நாநம் முப்பது நாட்களிலும் சர்க்கரை கலந்த எள்ளை தாநம் செய்யவேண்டும். எள்ளு மூன்று பங்கும் சர்க்கரை ஒருபங்குமாக இருக்க வேண்டும். ஸ்நாநம் ஆனபின் ப்ரயாகமண்ணை ஶிரஸ்ஸில் அணிந்து ஸூர்யனுக்கு அர்க்யம் அளிக்கவேண்டும். பித்ருதேவதைகளுக்கும் தர்ப்பணம்செய்து ஜலத்தில் இறங்கி இஷ்ட தேவதையை நமஸ்கரித்துப் புருஷோத்தமனைப் பூஜிக்க வேண்டும். பிறகு நித்யகர்மாக்களைச்செய்து பூமியில் படுக்கை ப்ரும்மசர்ய நியமம், இவைகளைக் கைகொள்ள வேண்டும். எள்ளை அரைத்துச் சிரஸில் தடவிக் கொண்டு ஸ்நாநம் செய்வது, எள்ளையே உடலிலும் தடவிக்கொள்வது, திலஹோமம், எள்ளுகலந்த தீர்த்தத்தால் தர்ப்பணம் செய்வது, திலத்தை உண்பது திலதாநம் செய்வது, என்ற ஆறும் ஸகல பாபங்களையும் போக்கும். இதற்கு ஷட்திலம் என்று பெயர்.

தைலம் நெல்லிக்காய் இவைகளை நித்யம் தாநம் செய்யவேண்டும். நித்யம் தம்பதிபூஜை செய்பவர் ஸூர்ய லோகம் செல்வர். மாகமாஸத்தில் ஒரேவேளை உணவுடன் "நமோஸ்து வாஸுதேவாய" என்று நித்யம் நூற்றெட்டு முறை ஜபிக்கவேண்டும். இதனால் அதிராத்ர யாகபலன் உண்டாகும். மாக சுக்ல ப்ரதமை முதல் ஹயக்ரீவ பூஜைசெய்யவேண்டும். யக்ஞோபவீதம் தூபம் சந்தநம் முதலியவைகளையும் தாநம் செய்யவேண்டும். இந்த மாக ஸ்நாந வ்ரதத்திற்கும் ஏகாதசி போல் உத்யாபநம் செய்யவேண்டும். கம்பளம் ரத்நம் வஸ்த்ரம் பாதுகை முதலியவைகளைத் தாநம் செய்ய வேண்டும். மாக ஸ்நாநத்தால் தகாதவரைப் புணர்ந்த பாபம் திருடிய பாபம் தாநம் வாங்கியது மற்ற ரஹஸ்ய மான பாபங்களும் அகலும்.

---

**எவ்வளவு காலம் வீணாகச் செல்கிறது?**



### ப்ரயாக மரணம்.

ப்ரயாகத்தில் ஆயுள் முடிந்து ஸ்வாபாவிக மரணம் நேர்ந்தால் நற்கதி என்பது ஸகல புராணங்களிலும் ப்ரஸித்தம். நற்கதியை நாடுபவர் அங்கு உடலை விடலாம் என சில புராணங்கள் கூறுகின்றன. வலுவிலே நமது உயிரைமாய்த்துக்கொண்டால் நரகம் உண்டாகும். அன்றியும் காலமரணம் வரும்வரை பேயாகத் திரியவேண்டும் என சாஸ்த்ரம் கூறுகிறது. இப்படி முரண்பட்ட இடத்தில் எது துர்பலமானது? எது ப்ரபலமானது? என மற்ற பலங்களைக்கொண்டு தீர்மானிக்க வேண்டும். அன்றியும் சிலவிடத்தில் பொதுவாக ஒன்றைக்கூறும். அது ஸாமான்ய ஶாஸ்த்ரம் எனப்படும். சிலவிடங்களில் விஶேஷமாக; எதைக்கூடாதென தடுத்ததோ அதையே செய் என கூறும். ஆதலால் ஸாமான்ய ஶாஸ்த்ரம் விஶேஷ சாஸ்த்ரத்தினால் அடிபடும். பொய் கூறாதே என்பது ஸாமான்யம். ஒரு பசுவைக்காக்கப் பொய் அவஶ்யமானால் சொல் என்பது விஶேஷம்.

அதேபோல் தற்கொலை செய்துகொள்ளாதே என்பது ஸாமான்யம். ஏதேனும் ஒரு காமனையை நாடியோ அல்லது மோக்ஷத்தை விரும்பியோ ப்ரயாகத்தில் உடலை விடலாம் என்பது விஶேஷம். ஆனால் ப்ராரப்த கர்மாவால் தோன்றிய நோயை அனுபவிக்க முடியவில்லை என்றோ அல்லது அவமாந காரணமான கார்யத்தைச் செய்து மானத்தைக் காக்கவோ? தற்கால வழக்கம் போல் காதல் கைகூடவில்லை என்றோ அல்லது வாழ்க்கையில் வெறுப்பு கொண்டோ ப்ரயாகத்திலும் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது. அப்படிசெய்தால் நரகமே.

தீர்த்தத்தில் உடலை விடுவதுபோல் ஆஹாரமில்லா திருந்து அதாவது ப்ராயோபவேஶம் செய்து உடலை ப்ரயாகத்தில் விடலாம். அதனால் நற்கதியும் கோரிய காமனையும் கைகூடும். ஸ்ரீ ராமனைக்கண்டு தர்சித்தபின் ஸுதீக்ஷ்ணர் முதலியவர் அக்நியில் இறங்கியதுபோல தீயில் விழுந்தும் உடலைவிடலாம். பசுவைக்காக்க புலி

---

**உயர்ந்த காயத்ரிக்குத்தானா 10 நிமிஷமில்லை?**

அல்லது துஷ்ட ப்ராணிகளிடம் அடிபட்டு இறந்தாலும் சிறந்த கதி உண்டாகும். ஆங்கு ஆலமரத்தினருகே உடலைவிடுபவர் ருத்ரலோகம் செல்வர். கோடி தீர்த்தத்தில் உயிரைவிடுபவர் கோடிவர்ஷம் ஸ்வர்க்கஸுகத்தை அனுபவிப்பார். ப்ரயாகத்தில் எங்கு உடலை விட்டாலும் இருபத்தோரு தலைமுறை நற்கதி உண்டாகும். மாக மாஸத்தில் பகவானை த்யானம் செய்துகொண்டே உடலை விடுபவர் முக்திபெறுவர். நற்கதி அடைந்த இத்தகையவர்களது மரணத்தில் பங்காளிகளுக்கு மூன்றுநாள் தான் ஆசௌசம். ஆனால் ஸபிண்டீகரணாதிகளைப் பனிரண்டாவது நாளிலே தான் செய்யவேண்டும்.

### ப்ராயச்சித்தத்திற்காக ப்ரயாக மரணம்.

இதுவரை உடலை விடுவதற்காகக் கூறப்பட்ட உபாயங்களைப்போல் ஹிமாலயத்தை நாடி உண்ணாமல் உறங்காமல் திரும்பிப்பாராமல் நடந்துகொண்டே போய் உடல் விழுந்த இடத்தில் உயிர் போவதொரு உபாயம். பாண்டவர் இங்ஙனம் சென்றனர். ஸஹோதரி, தாய், மாஸ உபவாஸமிருக்கும் ஸ்த்ரீ, குருபத்நீ இவர்களைப் புணர்ந்தாலும், மநமரிய குருவுக்கு த்ரோஹம் செய்தாலும் அந்த பாபம் அகல துஷாக்நி காரீஷாக்நியில் உடலை விடுவது என்ற ஒருவகை கூறப்படுகிறது.

குமாரிலபட்டர் என்ற ஸ்ரீ ஸுப்ரமண்யரின் அவதாரமான பண்டிதோத்தமர் தான் ஒரு பௌத்தன் என்று கூறி புத்த குருவிடம் வித்யை கற்றார். அந்த பாபம் அகல பூமியில் ஒரு குழி வெட்டி அதில் உமியை நிறைய வைத்து அதில் தீ வைத்து அதன் இடையில் அமர்ந்து ப்ராணனைவிட்டார். அதேபோல் ப்ரயாகத்தில் இறந்தால் பாபம் அகலுவதுடன் நற்கதியும் கிடைக்கும். எந்த காரணத்தைக்கொண்டு உடலைவிடுவதாயினும் கிழவர்களான தாய் தந்தைகளையும் இளம் மனைவியையும் சிறு குழந்தைகளையும் விட்டு விட்டு இறக்கக்கூடாது. இப்படியே பர்த்தாவின் உத்தரவில்லாதவளும் இளம் குழந்தைக்காரியும் கர்ப்பிணியும் உடலை விடக்கூடாது.

---

***தேடிவந்த லக்ஷ்மியை காலால் உதைக்கலாமா ?***

# க்ஷேத்ரங்கள்.

## ஸ்ரீ காஞ்சீபுரம்.

***சுக்தீஸ்வரர் :*** இக் குளத்தில் உனக்கு வேண்டிய முத்துகள் கிடைக்கும். எடுத்துப் பூஜைசெய். நீங்கள் முடிவில் கைலாஸம் வருவீர் என்று கூறிமறைந்தார். அதனால் சுக்தீசர் சுக்திதீர்த்தம் எனப்பெயர் உண்டானது.

***கங்கணேஸ்வரர், கடகேஸ்வரர் :*** இவ்விரண்டும் கோனேரிக்குப்பம் கம்மாளத்தெருவில் இருக்கின்றன. தேவீகாமாக்ஷி ஏகாம்ரரை நாடித்தவம் செய்வதற்குமுன் ரக்ஷை தரித்துக் கொள்வதற்காக ப்ரதிஷ்டை செய்து பூஜித்த லிங்கமிவைகள்.

***த்வக் கௌசிகேஸ்வரர் :*** காமாக்ஷி ஆலயத்திற்கு ஈசாநதிக்கில் உள்ளது. பகவான் பார்வதியைப்பார்த்து நீலீ அதாவது கறுப்பு உடலுள்ளவளே என அழைத்தார். தேவி வெட்கமடைந்து பகவான் உத்திரவுபடி காஞ்சி வந்து கறுப்பானதோலுடன் ஒரு லிங்கத்தைப் பூஜித்தாள். சிவன் ப்ரத்யக்ஷமாகி அவளது கறுப்புத்தோலை கௌசிகீ என்ற பெயருடன் தனி தேவியாக இருக்கும்படி செய்து ஸ்வர்ணவர்ணமான கௌரியாக்கினார். ஆதலால் த்வக்கௌசிகேசர் என்ற பெயருண்டானது.

***மஹாகாளேசலிங்கம் :*** மஹாகாளன் என்ற ஸர்ப்பராஜன் சிவாபரணமாக கைலாஸத்தில் இருப்பவர். ஆங்குள்ள ஒரு கன்னிகையினிடம் இவர் மோஹங்கொண்டார். ஆதலால் சிவன் இவனைப் பூலோகத்தில் பாம்பாகி காஞ்சியில் என்னைப் பூஜித்து பிறகு கைலாஸம் வா என்றார்; அது காஞ்சியில் மஹாகாளர் என்றழைக்கப்படுகிறது.

***மோஹிநீஸ்வரர் :*** அம்ருதத்தைத் தேவர்க்களிக்க மஹாவிஷ்ணு மோஹிநீ ரூபமெடுத்து தனது கார்யஸித்திக்காக பூஜித்த லிங்கம் அப்பெயர் பெற்றது.

***சாஸ்தேஸ்வரர் :*** மோஹினிக்கும் சிவனுக்கும் உண்டான சாஸ்தாவால் பூஜிக்கப்பட்டு அப்பெயர் பெற்றது.

---

***உன்னை அடைந்த காயத்ரியை கைவிடலாமா ?***

*ருத்ரகோடீஸ்வரர்;* முன் அதிகார பதவியிலிருந்து விலகிய கோடி ருத்ரர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கம் மொட்டைக்கோபுரம் என்றழைக்கப்படும் இடத்திலுளது.

*அபிராமீஸ்வரர்:* சங்குபாணி விநாயகருக்கு மேற்கே மச்சேந்த்ரரின் வடமேற்கே இப்பெயர் வாய்ந்த லிங்கமும் அதனருகே வாமந தீர்த்தமும் இருக்கிறது. பலியின் கர்வத்தை அடக்கி இந்த்ரனுக்கு ஸ்வர்க்க ராஜ்ய மளிக்க மஹா விஷ்ணு வாமநராகத் தோன்றி இங்கு சிவனைப் பூஜித்தார். அபிராமீ என்ற திக்கஜத்தின் மனைவி பூஜித்ததாலும் இப்பெயர் உண்டானது. அபிராம என்றால் அழகு என்று பொருள். [கோமாத்ரு புரமெனும் திருஆமாத்தூரில் ஸ்ரீ ராமன் ஸ்வயம்புவாய் அழகாயுமுள்ள லிங்கத்தைக்கட்டித்தழுவி அபிராமா என்று அழைத்ததால் அந்த க்ஷேத்திரத்திலும் அபிராமேஸ்வரர் இருக்கிறார். திருக்கடையூர் க்ஷேத்ரத்திலுள்ள தேவி அபிராமி எனப்படுவாள். அவள் மீது தமிழில் பாடப்பட்ட ஒரு அந்தாதி ப்ரஸித்தமானது].

***ஸேநாபதீஸ்வரர், அல்லது குமரகோஷ்டம்:—*** ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்தின் அருகே ராஜவீதியில் உள்ளது இது. ஸேநாதிபதி ஸுப்ரமண்யன். அவருக்குக்குமரன் என்றும் பெயருண்டு. ஆதலால் மேல்கண்ட இரண்டு பெயர்கள் ஸுப்ரமண்யனால் ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்ட லிங்கத்திற்குத்தோன்றின. அது ஒரு தனிசிறந்த தேவஸ்தாநம். காலத்தில் பூஜை உத்ஸவம் முதலியவைகள் நடக்கும் ஆலயங்களில் இது ஒன்று. ஸுப்ரமண்ய ப்ரதாநமான க்ஷேத்ரம். முருகனது மூர்த்தி அழகாயும் மூர்த்திகரித்ததாகவும் இருக்கிறது.

ஒருஸமயம் ப்ரும்மா கைலாஸநாதனை ஸேவித்துப் போகும்போது விளையாடிக்கொண்டிருந்த குமரன் ப்ரும்மாவை ப்ரணவத்தின் பொருள் உரைக்கும்படி கூறினார். அவர் அதை ஸரியாகச் சொல்லாததால் ப்ரும்மாவைச் சிறையில் அடைத்து முருகன் உலகைப் படைக்க ஆரம்பித்தார். இதை அறிந்த சிவன் ப்ரும்மாவை விட்டுவிடும்படி நந்தியிடம்கூறி அனுப்பினார்.

---

**பாரதப் போரை ஸந்த்யைக்காக நிறுத்தினர்.**



குமரன் அவரை விடாமலிருக்கவே பரமசிவன் கோபங்கொண்டு தானேவர முருகன் ப்ரும்மாவை விடுவித்துத் தந்தை கோபத்தை அடக்கினார். தான் தந்தை சொல்லை மீறிய தோஷம் அகல காஞ்சியில் ஒரு லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து பூஜித்தார். அதே ஸேநாபதீஸ்வர லிங்கம் எனப்படும்.

*மஹா ஶாஸ்தேஸ்வரர்:* இது வாணியர் மண்டபத்திலிருக்கின்றது. அஸுரரை மயக்கி ஸுரர்க்கு அம்ருதம் அளிப்பதற்காக விஷ்ணு மோஹிநீ ரூபம் எடுத்தார். அதைக்கண்டு சிவனும் மோஹித்து ஆலிங்கநம் செய்துகொள்ள ஹரிஹரபுத்ரனாக ஒரு குழந்தை பிறந்தது. அதே ஶாஸ்தா எனப்படும். அவர், தான் சிவகணங்களுக்குத் தலைவனாக காஞ்சியில் ஒரு லிங்கம் ப்ரதிஷ்டை செய்து பூஜித்தார். அதே மஹாஶாஸ்தேஸ்வரம்.

சபரிமலையிலும் மலையாளத்திலும் ஶாஸ்தாவின் பூஜைமிக விசேஷமானது. ஆண்டுதோறும் ப்ராம்மணர்கள் ஶாஸ்தா ப்ரீதி என்ற பூஜை ஸமாராதனை ஒவ்வொரு க்ராமத்திலும் செய்வார்கள். காஞ்சி காமாக்ஷி அம்மன் கோவிலில் பூர்ணா புஷ்களா என்ற இருதேவிகளுடன் ஶாஸ்தாவின் பிம்பம் அர்ச்சிக்கப்படுகிறது. கச்சபேஸ்வரர் ஆலயத்தில் சாஸ்தாவின் விக்ரஹம் மாத்ரம் இருக்கின்றது. தமிழ் நாட்டில் இதை ஐயனார் என்ற க்ராம தேவதையாகக் கருதி ப்ராம்மணேதரர்களே பூஜிக்கின்றனர்.

*கச்சபேஸ்வரர்:* இது ராஜவீதியிலிருக்கிறது. கச்சபம் என்றால் ஆமை. பாற்கடலைக் கடைந்தபோது விஷ்ணு கூர்மாவதாரம் செய்து மந்தரமலையைத் தாங்கினார். அம்ருதம் உண்டானபின்பும் அவர்கடலில் இருந்து அட்டஹாஸம் செய்து கடலையும் உலகையும் கலக்கினார். இதை அறிந்த சிவன் ஆமையைக் கொன்றார். ஆமை ஓட்டை, மாலையோடு அணிந்தார். மஹாவிஷ்ணு தன் குற்றத்தை மன்னிக்கத் தன் பெயரால் ஒரு சிவலிங்க ப்ரதிஷ்டைசெய்து பூஜித்தார். அங்குதான் ஸநத்குமாரருக்கு நந்தி ஶாபத்தால் தோன்றிய ஒட்டகை உருவம்

---

**ரயிலில் கூட காலத்தில் மனதால் செய்யலாம்.**

அகன்றது. அதைக்காட்ட மூன்று இடங்களில் அவ்வாலயத்தில் ஒட்டகை பிம்பம் இருக்கின்றன.

ப்ரும்மா சிவனைப் பூஜித்து ஸ்ருஷ்டி செய்யும் சக்தி பெற்ற இடம் இதே. ஶுக்ரன், குபேரன், ஸூர்யன், ததீசி முதலியவர் பூஜித்து ஸித்தி பெற்ற இடமது. கார்த்திகை மாதம் பானுவாரத்தில் பானு அங்கிருந்து ஸித்தி பெற்றதால், அச்சமயம் ஸ்நாநமும் சிவதர்சநமும் மிக விசேஷமானது. இன்றைக்கும் எண்ணிறந்த பக்தர் கார்த்திகை ஞாயர்களில் கூட்டம் கூட்டமாகச் சென்று குளத்தில் ஸ்நாநம் செய்து ஸ்வாமி தர்சநம் செய்வர்.

ப்ரணவமே அங்கு பலாச மரமாகத் தோன்றியது. ஆதலால் க்ஷேத்ர வ்ருக்ஷம் பலாசமரமாம். இதுவிஶாலமான இடம் அமைந்த ஸமீபத்தில் கும்பாபிஷேகம் ஆன உத்தமக்ஷேத்ரம். இங்குதான் பரமாசார்யரின் உத்திரவுபடி காஞ்சி புராணம் பத்து நாட்கள் நடந்தது. ஆங்குள்ளதுபோல் சென்னை நகரிலும் அரண்மனைக்கார வீதியில் ஒரு கச்சபேச்வர ஆலயம் வெகுநாட்களுக்குமுன் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுளது. இங்கும் ஸமீபத்தில் சாஸ்தா ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

**இஷ்ட ஸித்தீஶ்வரர் :** கச்சபேஶ்வரருக்கு வடக்கிலுள்ளது இந்த கோவில். இங்கு ததீசி எனும் முனிவர் சுக்ரர் கூறியபடி இவரை ஆராதித்து வஜ்ரமயமான சரீரத்தைப் பெற்றார். ஆங்குள்ள தடாகத்தில் வடபுறம் ஸ்நாநம் செய்தால் தர்மம் ஸித்திக்கும். கிழக்கே மூழ்கினால் அர்த்தம் ஸித்திக்கும். தெற்கே ஸ்நாநம் செய்பவர் காமஸித்தி பெறுவர். மேற்கே மூழ்கினால் மோக்ஷம் ஸித்திக்கும். தர்ம அர்த்தகாம மோக்ஷமெனும் நான்கு புருஷார்த்தங்களைத் தரக்கூடிய புண்ய தீர்த்தமது.

ஹரிஶாப பயஹரேசர் ப்ருகுமுனிவர் தன் மனைவியைக்கொன்ற மஹாவிஷ்ணுவைச் சபித்தார். விஷ்ணு இந்த லிங்கத்தைப் பூஜித்து ஶாப பயத்தை அகற்றிக் கொண்டார். நெல்லிக்காரத்தெருவில் உள்ளது இந்த ஆலயம். மதங்கமுனிவர் பூஜை செய்தது மதங்கேஶ்வர லிங்கம். மூன்றுகால அறிவையும் தந்த லிங்கம் த்ரிகாலேஶ்வர லிங்கமெனப்படும்.

---

**பிறகு யதோக்தமாகச் செய்யலாம்.**

# ஜீவனின் கதாகதி (32).

## பாஷாண உத்தாபநம்.

இறந்தவர் செய்த புண்யத்திற்கேற்றபடி ஆஹாராதிகளும் கிடைக்கும். நம் கடமையைச் செய்ய நாமும் ப்ரத்யாப்திக ஶ்ராத்தம் செய்யவேண்டும். முக்யமாக இறந்தபின் பனிரண்டு நாளைய கர்மாவையும், பனிரண்டு மாஸம் கர்மாவையும் கட்டாயம் செய்தே தீரவேண்டும். அச்சமயம் அந்த ஜீவன் செய்த புண்ய பலனை அளிக்கமாட்டார்கள். தானே உண்ணுத குழந்தைகளுக்குப்பசி தாஹம் அறிந்து பாலூட்டி வளர்ப்பது போல் இறந்த ஜீவனை ஸந்தோஷப்படுத்த வேண்டும். இளமையில் நமக்கு இப்படிப் பேருபகாரம் செய்து வளர்ப்பது கிழத்தன்மையிலும் இறந்த ஓராண்டிலும் நாம் பதில் செய்வதற்காகவேயாம்.

## ஶாந்தி ஹோமம்.

கர்த்தாவுக்கும் தாயாதிகளுக்கும் உண்டான ஆஶௌசம் அகலுவதற்காக இந்த ஹோமம்.

வழக்கப்படி அநுக்ஞை பெற்று ஸங்கல்பம் க்ருச்ரம் அக்நி ப்ரதிஷ்டை செய்யவேண்டும். இது ஔபாஸந அக்நி அல்ல. இதற்கு லௌகிக அக்நி என்று பெயர். இரண்டு தர்ப்பங்களால் பவித்ரம் செய்து அணியவேண்டும். இதுவரை ஒற்றை தர்ப்பத்தால் செய்த பவித்ரம் பயன் பட்டது. ப்ரேத கார்யத்திற்கு ஒற்றை தர்ப்ப பவித்ரம், தேவகார்யத்திற்கு இரண்டு, பித்ரு கார்யத்தில் மூன்று தர்ப்பத்தால் பவித்ரம் என்பதை மறக்கலாகாது. பாத்ர ஸாதநத்தில் யவம் (நெல்லு) ஓஷதிஸ்தம்பம் (பயிர்) அஶ்மா (கல்) ஒருகாளை, ஆத்து நொச்சிக்கிளை, நொச்சியாலாகிய மாலை, ஒரு காளைத் தோல் ப்ரதிலோமமாக தலைகீழாகச் செய்யப்பட்ட ஸ்ருக், ஸ்ருவம் மாவலிங்க இலை, ஆஜ்யஸ்தாலி ப்ரோக்ஷணீ பாத்ரம் இவைகளை இரண்டு இரண்டாக வைக்கவேண்டும்.

---

**சுசியோ அசுசியோ, காலமோ அகாலமோ ஸந்த்யை செய்**

ப்ரோக்ஷணீ ஸம்ஸ்காரம், அந்த ஜலத்தால் பாத்ரங்களை நிமிர்த்து ப்ரோக்ஷிக்கவேண்டும். ஹோமகார்யத்திற்குப் பயன்படும் பாத்ரங்களைப் பவித்திரத்தால் சுத்தமான ஜலத்தினல் ப்ரோக்ஷித்து பிறகே பயன் படுத்த வேண்டும். அப்படியே நெய் ஹோமஸாதநமான ஸ்ருக் ஸ்ருவம் இவைகளுக்கும் வேறுவகையான ஸம்ஸ்காரம் செய்தே உபயோகிக்கவேண்டும். ஸ்ருக்ஸ்ருவத்திற்கு பதிலாக இரு இலைகளை உபயோகிக்கிறோம். அக்நிக்கு மேற்கே செவப்பான காளைத்தோலைக் கிழக்கே தலை இருக்கும்படியும் மேலே ரோமம் இருக்கும்படியும் அமைத்து அதில் நொச்சி மாலையை அணிந்த எல்லா க்ஞாதிகளையும் ஆரோஹத என்ற மந்த்ரத்தைக்கூறி அமரும்படி செய்யவேண்டும்.

மந்த்ரார்த்தம்: "ஓ தாயாதிகளே! நீங்கள் தீர்க்காயுஸ்ஸாக இருக்க விரும்புகிறீர்களல்லவா? அதைப் பெற பெரியவன் முன்னே சின்னவன் பின்னே என்ற க்ரமப்படி இந்த காளைத்தோலில் ஏரி உட்காருங்கள். உங்கள் முன்னே இருக்கின்ற அக்நி நான் செய்யும் ஹோமத்தை ஏற்று அழகாக ப்ரகாசிக்கிறுர். நாம் நன்ருக வாழ அபரிமிதமான ரத்நங்களுடன் வந்திருக்கிறுர். அவர் நமக்குத் தீர்க்க ஆயுளைத் தரட்டும்."

யதாஹாநி என்ற மந்த்ரத்தைக்கூறி க்ரமமாக அமரும்படி செய்யவேண்டும். அதன் கருத்து. ஓ ப்ரும்மன்! ப்ரதமைக்குப் பிறகு த்விதியை. வஸந்தருதுவிற்குப்பிறகு க்ரீஷ்மருது. ஒரு பிதாவுக்கு மூத்த புத்ரனுக்கு அடுத்தபடி இளையவன் என்று எப்படி க்ரமமாகச் செய்தீரோ அப்படி எனது க்ஞாதிகளுக்கும் ஆயுளை க்ரமமாக அளியும்.

இதன்பிறகு ஆஜ்ய ஸம்ஸ்காரம் தர்வீஸம்ஸ்காரம் அக்நிபரிஷேசநம் செய்து ப்ரதிலோமமாக அதாவது தலைகீழாக இலையை அமைத்து, நாலுமுறை ஆஜ்யத்தை எடுத்து ஆஜ்ய ஹோமம் செய்யவேண்டும். அதன் கருத்து.

---

**காயத்ரியை விட்டவன் கடும் நரகம் செல்வான்.**

# ஸ்திரவார வ்ரதம்.

ஶனைஶ்சரன் மிக உக்ரமான க்ரஹம். எல்லோரையும் ஆட்டிவைப்பவரவர். அவரது பார்வை தீக்ஷ்ணமானது. அவர் பார்வையால் நரமுக கணபதியின் தலை அறுந்து சென்றதாகவும் பிறகு யானையின் தலையை வைத்து அவரை எழுப்பியதாகவும் ஒரு புராணம் கூறுகிறது. சிவன் தன்னிடம் அவனது சேஷ்டை செல்லாது என்றபோது தங்களருளால் தங்களையும் ஆட்டிவைக்கும் சக்தி தனக்குண்டு என்ருனும் ஶனைஶ்சரன். அப்படியானல் உன் சக்தியைக் குறித்த காலத்திற்குள் என்னிடம் காட்டு பார்ப்போம் என்றுகூறி சிவன் அவன் கண்ணில் படாமல் சிவலிங்கக்காயில் மறைந்து கொண்டாராம். வெகுநேரம் ஶனைஶ்சரன் காத்திருந்தான். குறித்தகாலம் முடிந்தபின் சிவன் வெளியில் வந்து உன்னல் என்னை என்ன செய்யமுடிந்தது? என்று கேட்டார். ஸ்வாமின்! எனக்கு அஞ்சி என் சக்தியால்தான் தாங்கள் ஸ்வஸ்தானத்தை விட்டு கேவலம் செடியில் பதுங்கி இருந்தீர் என்ருனும். இக்கதை நடந்ததோ அல்லவோ சிவலிங்கக்காயின்விதை சிவலிங்கம்போலிருக்கிறது. ஶனைஶ்சரன் இருப்பிடத்தைவிட்டு போகும்படி செய்பவன் என்பதை இக்கதைவிளக்குகிறது.

அத்தகைய ஶனைஶ்சரனல் உண்டாகும் துன்பம் அகன்று அவர் அருளால் ஸர்வக்ஷேமமும் உண்டாக சனிவார வ்ரதத்தை வெளியிடுகிறோம். ஆதித்யன் முதல் வார தேவதை. கடைசிவார தேவதை சனி. இவர் ஸூர்யனது புத்ரர். இவரை உபாஸித்தால் ஸகல க்ரஹங்களும் ஸந்தோஷமடைகின்றன. பாநுவாரத்தில் இரவில் சாப்பிடக்கூடாது என்பது தர்மவிதி. பலர் அதைவிட்டு ஸ்திரவாரம் இரவு புஜிக்காமலிருப்பது காம்யம்.

ஸமஸ்த ரோகம் அகலவும் ஶனைஶ்சரனது பார்வையால் உண்டான ஸகல பீடைகள் அகலவும் ஶ்ராவணமாத சனிக்கிழமையில் ஆரம்பித்து ஒவ்வொரு சனிக்கிழமையும் உபவாஸமிருந்து ஶனைஶ்சரனைப் பூஜிக்கவேண்டும்.

---

**உத்யோகத்திலும் மேன்மை தரும் காயத்ரீ.**

## ஶனைஶ்சர பூஜாவிதி.

சுக்லாம்பரதரம் — மமோபாத்த — மம ஸமஸ்த ரோக பீடா பரிஹாரார்த்தம் ஶனைஶ்சர த்ருஷ்டி ப்ராப்த பீடா நிவ்ருத்யர்த்தம் க்ரஹசார தோஷ ஶாந்த்யர்த்தம் ஶனைஶ்சர வ்ரதம் பூஜாஞ்ச கரிஷ்யே என ஸங்கல்பம் செய்து எள்ளு ராசியின் மீது வில்போல் மண்டலம் எழுதி ஸ்வர்ணத்தால் ஶனைஶ்சர ப்ரதிமை செய்து ஷோடஶ உபசார பூஜை செய்யவேண்டும்.

க்ருஷ்ணாங்காய நம: ஶனைஶ்சரம் ஆவாஹயாமி
நீலாய ஶனைஶ்சராய ஆஸநம் ஸமர்பயாமி
நீலமயூகாய ஶனைஶ்சராய பாத்யம் ஸமர்பயாமி
ஶ்வேத கண்டாய ஶனைஶ்சராய அர்க்யம் ஸமர்பயாமி
நீலோத்பல ஶ்யாமாய ஶனைஶ்சராய ஆசமநீயம் ஸமர்பயாமி
நீல தேஹாய ஶனைஶ்சராய ஸ்நாநம் ஸமர்பயாமி
குப்ஜாய ஶனைஶ்சராய பஞ்சாம்ருத ஸ்நாநம் ஸமர்பயாமி
ஶனைஶ்சராய சுத்தோதக ஸ்நாநம் ஸமர்பயாமி [யாமி
திப்யமாந ஜடாதாராய ஶனைஶ்சராய வஸ்த்ரம் ஸமர்ப
பருஷகாத்ராய ஶனைஶ்சராய யக்ஞோபவீதம் ஸமர்பயாமி
ஸ்தூலரோமாய ஶனைஶ்சராய அலங்காரான் ஸமர்பயாமி
நித்யாய ஶனைஶ்சராய கந்தான் தாரயாமி
தூர்தாய ஶனைஶ்சராய அக்ஷதான் ஸமர்பயாமி
ஸதாத்ருப்தாய ஶனைஶ்சராய புஷ்பம் ஸமர்பயாமி
மந்தாய ஶனைஶ்சராய தூபம் ஸமர்பயாமி
நிஸ்ப்ருஹாய ஶனைஶ்சராய தீபம் தர்சயாமி
தாமஸாய ஶனைஶ்சராய நைவேத்யம் ஸமர்பயாமி
நீலோத்பலாபாய ஶனைஶ்சராய ஆசமநீயம் ஸமர்பயாமி
க்ருஷ்ணவபுஷே ஶனைஶ்சராய கரோத்வர்தநம் ஸமர்பயாமி
திர்க்க தேஹாய ஶனைஶ்சராய தாம்பூலம் ஸமர்பயாமி
மந்த கதயே ஶனைஶ்சராய தக்ஷிணம் ஸமர்பயாமி

---

**ஆரோக்யத்தைக் கருதியேனும் காயத்ரீ செய்.**



க்ஞாந நேத்ராய ஶனைஶ்சராய ப்ரதக்ஷிணம் ஸமர்பயாமி
ஸௌர்ய புத்ராய ஶனைஶ்சராய நமஸ்காரான் ஸமர்பயாமி.

கோணஸ்த: பிங்களோ பப்ரு: க்ருஷ்ணோ ரௌத்ராத்மகோயம:. ஸௌரி: ஶனைஶ்சரோமந்த: பிப்பலாதிஷு ஸம்ஸ்தித:.

ஏதாநி ஶநிநாமாநி ஜபேத் அஶ்வத்த ஸந்நிதௌ
ஶனைஶ்சரத் ருதாபீடா நகதாசித் பவிஷ்யதி.

என்று பிரார்த்தனை செய்து அஶ்வத்த ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். அஶ்வத்தத்தின் அருகே, ஶனைஶ்சர பூஜை செய்வது சிறந்தது.

### அஶ்வத்த ப்ரதக்ஷிண மந்த்ரம்.

மூலதோ ப்ரும்மரூபாய மத்யதோ விஷ்ணு ரூபிணே
அக்ரதஶ் ஶிவரூபாய வ்ருக்ஷ ராஜாயதே நம:

குறைந்தது ஏழு ப்ரதக்ஷிணம் ஏழு நமஸ்காரம் செய்ய வேண்டும். ரோக நிவிருத்திக்காகவோ ஸந்தாநத்தை நாடியோ அஶ்வத்த ப்ரதக்ஷிணம் செய்வதானால் நூற்றெட்டு செய்யவேண்டும்.

---

## ஶனைஶ்சர வ்ரத மஹிமையும் கதையும்.

கோஸல தேசத்தில் ஒரு ஸமயம் ஶனைஶ்சரன் ரோஹிணீ ஶகடத்தைப் பிளந்து சென்றதால் பனிரண்டாண்டு பாரினிலே மழை பொழியா தொழிந்தது. புற்பூண்டுகளெல்லாம் பற்றி எரிந்தன. தாபத்தால் உலகெலாம் வாடிற்று. இதற்குக்காரணம் யாதென தஶரதன் வஸிஷ்டரைக் கேட்டார். ஶனைஶ்சரனது ரோஹிணீ ஶகட பேதமே காரணமென்றார் குரு. தஶரதன் ஶனைஶ்சரனைத் தேடி பத்து திக்கிலும் அலைந்தான். முடிவில் அவரைக் கண்டு—

நம: க்ருஷ்ணாங்க நீலாய ஶ்வேதகண்ட நிபாயச
நம: பருஷகாத்ராய-ஸ்தூல ரோமாயதே நம:
நமோ மந்தகதே துப்யம்-நிஸ்ப்ருஹாய நமோ நம:

---

**குடும்ப நன்மைக்காகவேனும் காயத்ரீ செய்.**

நமோ நித்யம் க்ஷுதார்தாய-ஸதா த்ருப்தாயதே நம:
தபஸா தக்த தேஹாய-நித்யயோக தராயச
நமஸ்தேக்ஞாந நேத்ராய-காஸ்யபாயார்க்க ஸூநவே

இந்த ஸ்லோகங்களால் துதித்தார்.

இதைக் கேட்ட ஸனிஸ்சரன் ஸந்தோஷ மடைந்து என்ன வரம் வேண்டுமென்றார். தஸரதன் இன்றுமுதல் தனது நாட்டிற்குப் பீடை உண்டுபண்ணாமல் இருக்க வேண்டும் என்று கேட்டார். ஸனிஸ்சரன் அங்ஙனமே வரம் தந்து தனது பூஜாவிதியையும் கூறினார்.

ஸ்ராவணமாதம் மந்தவாரத்தில் வந்நி மரம் அல்லது அரச மரத்தின் அடியில் திலராசியில் எனது பிம்பத்தை ஸ்வர்ணத்தினால் செய்து முப்பத்துமூன்று ஸ்திரவாரம் பூஜை செய்யவேண்டும். பிறகு உத்யாபநம் செய்யும் போது எள்ளு அன்னத்தால் ஹோமம் செய்து கறுப்பு கோவை தாநம் செய்யவேண்டும். நூற்றெட்டு முறை "ஸமக்நி" என்ற மந்த்ரத்தால் ஹோமம் செய்யவேண்டும். ஏழு ப்ராம்மணர்களைப் பூஜித்து வஸ்த்ரமளித்து அன்னதானம் செய்ய வேண்டும். வஸ்த்ரம் ப்ரதிமை இவைகளை ஆசார்யனுக்குத் தக்ஷிணையுடன் தரவேண்டும். இப்படி செய்பவர் ஏழு ஜன்மாவில் தனிகராகவே பிறப்பர். பிறகு மோக்ஷத்தை அடைவர். வேறு எந்த க்ரஹ பீடையும் இருக்காது.

கோசாரத்திலோ வர்க்கத்திலோ நான்,—ஸநி விஷமமாக இருந்தாலும், நான் ஸந்தோஷமடைந்தால் ராஜ்யம் அளிப்பேன். கோபத்துடன் இருந்தால் ராஜ்யத்தைக் கூட அபஹரிப்பேன். ஜன்ம ஸநியானாலும் பனிரண்டில் அல்லது அஷ்டமத்தில் இருந்தாலும் சனிக்கிழமை பூஜை செய்தாலும் எள்ளு அன்னம் அளித்தாலும் நான் ஸந்தோஷமடைந்து மற்ற க்ருஹங்களால் உண்டாகும் பீடையைக்கூட அகற்றி நல்ல பலனைத்தருவேன் என்றார் ஸனிஸ்சரன்.— தஸரதனும் அங்ஙனமே ஸனிஸ்வர வ்ரதத்தைச் செய்து உத்யாபநம் செய்தார். அதனால் கோஸல நாட்டில் மாதம் மும்மாரி மழை பொழிந்து நாடு செழித்திருந்தது.

---

**உன் க்ஷேமத்தை விரும்பும் தாய் காயத்ரீ.**



மூன்றாவது மநுவான ப்ரியவ்ரதனது புத்ரர் உத்தமன் என்பவர், கங்கைக்கரையில் மூன்றாண்டு நியமத்துடன் தேவியை வாக்பவ பீஜத்தால் ஆராதித்தார். தேவி ப்ரத்யக்ஷமாகி மந்வந்தர ஆதிபத்யத்தையும் அகண்டகமான ராஜ்யத்தையும் புத்ராதி பாக்யத்தையும் தந்தருளினாள். நான்காவது மநு ப்ரியவ்ரதனது தாமஸன் என்ற புத்ரன் நர்மதையின் தென்கரையில் தேவியை ஜகன்மயமாகக் கருதி காமபீஜத்தினால் வாஸந்தநவராத்ரியிலும் ஸாரதா நவராத்ரியிலும் ஆராதித்தார். தேவியின் அநுக்ரஹத்தால் தாமஸமன்வந்தர பதவியைப் பெற்றார். அகண்டமான ராஜ்யத்தையும் மஹாவீரர்களான பத்து புத்ரர்களையும் பெற்று ஸ்வர்க்கம் சென்றார். தாமஸ மநுவின் ஸஹோதரரான ரைவதர் என்பவர் ஐந்தாவது மநு. யமுனைக் கரையில் வாக்ஸம்பத்தைத் தரக்கூடிய காம பீஜத்தால் தேவியை ஆராதித்தார். சிறந்த பலத்தையும் ராஜ்யத்தையும் ஸந்ததியையும் பெற்று தர்மத்தை நிலைநாட்டி ரைவதமநு ஸ்வர்க்கம் சென்றார்.

எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

---

## ஒன்பதாம் அத்யாயம்.

அங்கராஜனது புதல்வரான சாக்ஷுஷர் என்பவரே ஆறாவது மநு. அவர் புலஹர் எனும் முனிவரைச் சரணமடைந்து அகண்டமான ராஜ்யம் ஒப்பற்ற பலம் நற்கீர்த்தி ஸத்புத்ரன் நீண்ட ஆயுஸ் முடிவில் உத்தம கதி இவைகளைப் பெறுவதற் கேற்ற உபாயத்தைக் கூற வேண்டும் என வேண்டினார். ராஜன்! தேவியின் அருளால் தான் நீ கேட்ட எல்லா ஸம்பத்தையும் பெறமுடியும். வாக்பவ பீஜத்தை மூன்று காலங்களிலும் ஜபம் செய். அதற்கு ஸமமான மந்த்ரம் வேறில்லை. இதை ஜபித்தே ப்ரும்மா படைக்கும் ஸக்தியைப் பெற்றார். அன்னையின் அருளால் லோகபாலர்களும் மற்றவர்களும் நிக்ரஹ அநுக்ரஹ சக்தியைப் பெற்றார்கள். தேவியை ஆராதித்து நீ ஸகல பாக்யத்தையும் பெறுவாய் என்றார் புலஹர். அங்கபுத்ரனை அரசன் விரஜாநதி தீரம்

சென்று சிறகுகளைப் புஜித்து வாக்பவ பீஜத்தால் தேவியை ஆராதித்தார். இரண்டாமாண்டு நீரை மாத்ரம் அருந்தி மூன்றாமாண்டு காற்றைமாத்ரம் புஜித்து அசைவற்ற கட்டைபோல் நின்றார்.

பனிரண்டாண்டு சென்றபின் தேவி அரசன் எதிரே தோன்றி, ராஜன்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றாள். அந்தர்யாமியாயுள்ள தங்களுக்குத் தெரியாத துண்டோ? மன்வந்தர ஆதிபத்யம் நிஷ்கண்டகமான ராஜ்யம் வீரர்களான ஸத்புத்ரர் முடிவில் மோக்ஷம் முதலியவைகளைத் தந்தருளும் என்றார். தேவி அங்ஙனமே ஸகல பாக்யத்தையும் தந்து மறைந்தாள். எல்லா மநுக்களாலும் கொண்டாடத் தக்க பாக்யத்தைப் பெற்று சாக்ஷுஷ மன்வந்தா முடிவில் முக்தி பெற்றார்.

ஒன்பதாம் அத்யாயம் முற்றிற்று.

## பத்தாம் அத்யாயம்.

எழாவது மநு வைவஸ்வத மநு ஆவர். அவரும் தேவியை ஆராதித்து மன்வந்தர அதிபதி யானார். ஸாவர்ணி மநு என்பவர் எட்டாவது மநு ஆவார். அவர் தேவியை உபாஸித்து ஸகல ராஜாக்களாலும் பூஜிக்கத் தக்கவராகவும் மஹா பராக்ரம சாலியாகவும் சிறந்த தேவீ பக்தராகவும் விளங்கினார். முற்பிறவியில் அவர் தேவியை நன்கு அர்ச்சித்ததால் ஒப்பற்ற பாக்யத்தைப் பெற்றார். ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் சைத்ரவம்சத்தில் ஸுரதன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் உயர்ந்த வில்லாளி. சிறந்த கவி. ஒப்பற்ற குணசாலி. ஸர்வ சாஸ்த்ரங்களிலும் நிபுணன். ஒரு ஸமயம் கோலா என்ற ஸுரதனது ராஜதானியைப் பகைவர் தாக்கினார்கள்.

ஸுரதன் தனது ஸேனையுடன் நகரத்திலிருந்து கிளம்பி போருக்கு வந்தார். பலபகைவர் ஒன்றுசேர்ந்து ஸுரதனைத் தோல்வி அடையும்படிச் செய்தனர். அவரது மந்த்ரிகளும் முக்யமானவர்களும் அவரது தநத்தை அபஹரித்துச் சென்றனர். வேட்டையாடுவது என்ற வ்யாஜமாக ஸுரதன் குதிரைமீதேறி கானகம் சென்றார். மநங்



கலங்க பித்தனைப்போல் ஆஸ்ரமங்களில் திரிந்து தற்செயலாக ஸுமேதஸ் என்ற முநிவரது ஆச்ரமத்தில் சிலநாள் தங்கினார்.

ஒரு ஸமயம் முநிவர் பூஜை முடிந்து வந்தபோது அரசன் அவரை வணங்கி, "மஹர்ஷே! தாங்கள் தத்வமுணர்ந்தவர். எனது மநதிலுள்ள துக்கத்தைத் தாங்கள் அகற்ற வேண்டும். பகைவர் எனது ராஜ்யத்தை அபஹரித்தனர். மந்த்ரிகளும் மற்றவரும் பொருளை எல்லாம் கவர்ந்தனர். ஆயினும் என்னைச் சார்ந்தவர் அவர்கள் என்ற அபிமானம் நீங்கவில்லை. என் செய்வேன்? உமது அநுக்ரஹத்தையே நம்பி இருக்கிறேன்" என வேண்டினார். அரசே! அன்னையின் மஹிமையை என்னென்று சொல்வேன்? உலக வடிவமானவள். மும்மூர்த்திகளையும் படைத்தவள். மஹா மாயாஸ்வரூபிணி. அவள்தான் மனிதருடைய மநதைப் பலாத்காரமாக மோஹிக்கும்படி செய்கிறாள். ப்ரும்மனாகி படைக்கிறாள். விஷ்ணுவாகி காக்கிறாள். ருத்ரனாகி உலகை லயிக்கும்படிச் செய்கிறாள். காளீ காளராத்ரீ கமலா கமலாலயா முதலிய பல பெயர் பெற்றவள். அவளுடைய அருள் உள்ளவனே மோஹத்தை ஜயிக்க முடியும் என்றார் ஸுமேதஸ் எனும் அம்முநிவர்.

பத்தாம் அத்யாயம் முற்றிற்று.

ஆவணக்காப்பக
12538
சென்னை-600 008.

## பதினோராம் அத்யாயம்.

அந்த தேவியினுடைய ஸ்வரூபத்தை நன்கு விளக்கி வர்ணிக்கும்படி ஸுரதன் கேட்க ஸுமேதஸ் கூறினார்: ஒரு ஸமயம் உலகெலாம் ஒடுங்கியுள்ளபோது ஜலத்தில் நாராயணன் படுத்துறங்கினார். அவரது காது மலத்திலிருந்து தோன்றிய மதுகைடபர் என்ற அரக்கர் விஷ்ணுவின் நாபிகமலத்தில் உள்ள ப்ரும்மாவைக் கொல்ல ஆரம்பித்தனர். அவர் பயந்து விஷ்ணுவினிடம் வந்தார். அவர் நித்திரைக்கு வசமானதைக் கண்டு சிந்தைகொண்டு நித்ராதேவியைச் சரணமடைந்து துதித்தார். ஓ தேவி! நீ ஒருவளே உலகில் இருப்பவள். தயை என்ற குணத்

துடன் சேர்ந்து இரு ரூபமாகிறாய். மூன்று வேதமாகி மூன்று குணங்களுக்கு இருப்பிடமாகிறாய். நான்காவது மூர்த்தியாகி நான்கு அவஸ்தைகளை உண்டுபண்ணுகிறாய்.

பஞ்சமியாக இருந்து பஞ்ச பூதங்களுக்குத் தலைவியாகிறாய். ஷஷ்டியாக இருந்து ஷஷ்டேஶ்வரீ என்றும் ஸப்தமி ஸப்தவாரேஶ்வரீ என்றும், அஷ்டமி அஷ்டவஸுநாதை என்றும் நவமீ நவக்ரஹேஶ்வரீ, தஶமீ தசதிக் பூஜ்யா என்றும் ஏகாதஶீ ஏகாதஶ ருத்ரர்களால் பூஜிக்கப்பட்டவள். த்வாதஶீ பனிரண்டு புஜமுள்ளவள் என்றும் த்ரயோதஶீ பதிமூன்று கணங்களுக்கு ப்ரியமானவள் என்றும் சதுர்த்தஶீ சதுர்தச மநுக்களை உண்டு பண்ணுபவள் என்றும் பஞ்சதஶீ பதினைந்து திதியாக இருப்பவள் என்றும் ஷோடஶீ பதினாறு சந்த்ரகலை என்றும் தமோகுண ரூபிணீ என்றும் உன்னை உலகம் உணர்கிறது. உன்னால் சூழப்பட்டு ஒன்றுமறியாதிருக்கும் விஷ்ணுவை எழுப்பு. மதுகைடபரிடமிருந்து அவர் என்னைக் காக்கட்டும் என்று ப்ரும்மா துதித்ததைக்கேட்டு ஸந்தோஷம் அடைந்தாள்.

நித்ராதேவி விஷ்ணுவைவிட்டு மதுகைடபர்களையும் மயக்கிச்சென்றாள். மதுகைடபர் மாதவனிடம் சென்று ஐந்து ஆயிரம் ஆண்டு போர் புரிந்தனர். தேவியின் மாயையால் மோஹமடைந்த அரக்கர் மஹாவிஷ்ணுவைப் பார்த்து ‘உமக்கு வேண்டிய வரத்தைக்கேள்’ என்றனர். விஷ்ணு தன்னால் அவர்களுக்கு மரணம் உண்டாகவேண்டும் என்ற வரத்தைக்கேட்டார். ஜலமில்லாத இடத்தில் என்னைக்கொல் என்று அவர்கள் கூற பகவான் தனது துடையை அகலமாகச்செய்து அதில் சக்ரத்தினால் அவர்கள் கழுத்தை அறுத்தார். இது மஹா காளீஸ்வரூபமாகும்.

பதினொன்றாம் அத்யாயம் முற்றிற்று.

---

## பனிரண்டாம் அத்யாயம்.

எருமையின் வயிற்றில் பிறந்த மஹிஷாஸுரன் தவத்தினால் ஒப்பற்ற வரன்களைப்பெற்றான். தேவர்களை எல்லாம் ஜயித்து எல்லா பதவிகளையும் அபஹரித்து



மூவுலகையும் ஆண்டுவந்தான். தேவர் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிவனும் விஷ்ணுவும் உள்ள இடத்திற்குச் சென்று முறையிட, இதைக்கேட்ட சிவனும் விஷ்ணுவும் கோபங் கொண்டார்கள். சிவனுடைய முகத்திலிருந்து ஆயிரம் ஸூர்யனது தேஜஸ்ஸுக்கு ஸமமான ஒரு தேஜஸ் உண்டானது. அங்ஙனமே விஷ்ணு முதலிய தேவர்களிடமிருந்தும் உக்ரமான தேஜஸ் உண்டானது. சிவதேஜஸ் முகமாகவும், யமதேஜஸ் கேஶமாகவும், விஷ்ணு தேஜஸ் கைகளாகவும், சந்த்ர தேஜஸ் ஸ்தநங்களாகவும், இந்த்ர தேஜஸ் இடையாகவும், அக்நி தேஜஸ் மூன்று கண்களாகவும் மற்ற தேஜஸ் மற்ற அங்கங்களாகவும் ஆயின. எல்லா தேவர்களுடைய தேஜஸ்ஸுகளாலும் மஹிஷாஸுர மர்த்தினீ என்ற தேவி தோன்றினாள்.

ஶிவன் ஶூலத்தையும் விஷ்ணு சக்ரத்தையும் வருணன் ஶங்கத்தையும் அக்நி ஶக்தியையும் இந்த்ரன் வஜ்ரத்தையும் யமன் காலதண்டத்தையும் காலன் கத்தியையும் ஸமுத்ரம் ஹாரத்தையும் இரு வஸ்த்ரங்களையும் சூடாமணி முதலிய ஆபரணங்களையும் தந்தார்.

ஹிமவான் ஸிம்ம வாஹநத்தையும், குபேரன் பாநபாத்ரத்தையும் சேஷன் நாக ஹாரத்தையும் மற்றவர் மற்ற ஆயுதங்களையும் தந்து பலவகையான ஸ்தோத்ரங்களால் தேவியைப் புகழ்ந்தார்கள். இதைக்கேட்டு தேவி மஹிஷாஸுரனை வதம் செய்ய ஸிம்மநாதம் செய்தாள். இதைக் கேட்டு பயந்த மஹிஷன் தனது ஸேனைகளுடன் கிளம்பி வந்து தேவியோடு போர்செய்தான். சிக்ஷுரன் க்ராமணி துர்த்தரன் துர்முகன் பாஷ்கலன் தாம்ரன் முதலிய ஸேநாதிபதிகளும் வீரர்களும் தேவியுடன் சண்டை செய்தனர். தேவீ வீரஸேனைகளை அடித்துக் கொன்று குவித்தாள். இதைக்கண்டு கோபங்கொண்ட மஹிஷன் மாயையால் பற்பல உருவங்களைத் தாங்கி தேவியை எதிர்த்தான். அன்னை அவ்வெல்லா ரூபங்களையும் அடித்து நாசம் செய்தாள். முடிவில் மஹிஷ ரூபத்துடன் வந்தான். தேவி பாஶத்தினால் அவனைக் கட்டி அவனது ஶிரத்தை அறுத்துத் தள்ளினாள். மிகுதியான ராக்ஷஸ ஸேனை பயந்து ஓடிவிட்டது. அமரர் வெற்றி பெற்ற அன்னையைத் துதித்தார்கள்.

ஒரு ஸமயம் ஶும்ப நிஶும்பர் என்ற ராக்ஷஸ ஸஹோதரர்கள் புஜபல பராக்ரமத்தால் தேவர்களை வென்று ஸ்வர்க்காதி லோகத்தைப் பிடுங்கிக்கொண்டனர். ஸுகத்தையும் பதவியையும் காந்தியையும் இழந்த தேவர் ஹிமயமலை சென்று தேவியைத் துதித்தார்கள். தேவி ப்ரத்யக்ஷமாகி நீங்கள் கோரியபடி ஶும்ப நிஶும்பர்களை வதம்செய்கிறேன் என்று கூறி மறைந்தாள். சண்டமுண்டன் என்ற கிங்கரர், ஶும்ப நிஶும்பரிடம் சென்று தங்களுக்கேற்ற அழகுவாய்ந்த ஒரு ஸ்த்ரீ ரத்நத்தைக் கண்டோம். அத்தகைய அழகு வாய்ந்த ஸ்த்ரீ தேவரிலோ, அஸுரரிலோ, நரரிலோ, நாகரரிலோ கிடையாது. அவளுக்கேற்ற புருஷன் தாங்களே. தங்களுக்கேற்ற ஸ்த்ரீ அவளே என்றார்கள். ஶும்பன் உடனே ஒரு தூதனை அனுப்ப, தூதன் தேவியிடம் சென்று ஶும்பன் எனும் அஸுரேந்த்ரன் த்ரிலோகாதிபதி, ஸகல ரத்நங்களையும் அனுபவிக்கிறான். ஸ்த்ரீ ரத்நமான தங்களை மணக்க விரும்புகிறான் என்றான். இதைக்கேட்ட தேவி, தூத! நீ சொல்வது உண்மையே. ஆனால் நான் முன்னமே என்னோடு போர் புரிபவனையே மணம் செய்துக் கொள்வதாக ப்ரதிக்ஞை செய்து விட்டேன். ஆதலால் அவன் வந்து போர் புரிந்து என்னை ஏற்கட்டும் என்றாள்.

தூதன் தேவி கூறியதை ஶும்பனிடம் கூறினான். ஶும்பன் தூம்ராக்ஷன் என்றவனைப் பார்த்து, அவள் மயிரைப்பிடித்து இழுத்துவா என உத்திரவிட்டான். அறுபது ஆயிரம் ராக்ஷஸர்களுடன் தூம்ராக்ஷன் தேவியிடம் சென்று மஹாபல பராக்ரமம் வாய்ந்தவனும் ஸகல போகங்களை அனுபவிப்பவனுமான ஶும்பனை மணந்துகொள். இல்லையேல் மயிரைப் பிடித்திழுத்துச் செல்வேன் என்றான். தூம்ர! ஶும்பன் உனது ராஜா. நீ அவனது வேலைக்காரன், என்று தேவி கூறிக்கொண்டிருக்கும்பொழுதே தூம்ரன் தேவியிடம் ஓடிவந்தான். ஹும் என்ற ஶப்தத்தினாலேயே தேவி அவனைச்சாம்பலாக்கிவிட்டாள். தேவியின் வாஹநமான ஸிம்மம் மிகுதி உள்ளவர்களைக்கொன்றது. சிலர் பயந்து ஓடினர். இதைக்கேட்டு கோபங்கொண்ட ஶும்பன் சண்டமுண்டன் ரக்தபீஜன் முதலியவர்களை அனுப்பினான்.



அவர்கள் தேவியைத் தூக்கிச்செல்ல முயற்சித்தபோது தேவி சூலத்தினால் அவர்களையும் ஸேனையையும் கொன்றாள். இதைக்கேட்டு கடும் கோபங்கொண்ட ஶும்பனும் நிஶும்பனும் எண்ணிறந்த ஸேனை பின்தொடர தேவியிடம் வந்தனர். தேவி அவர்களுடன் போர்புரிந்து எல்லோரையும் நாஶம் செய்தாள். இந்த தேவியை ஸரஸ்வதி அல்லது வாகீஶ்வரீ என அழைப்பார்கள்.

காளி மஹாலக்ஷ்மீ, ஸரஸ்வதீ ஆகிய அவதாரங்களைக் கூறினேன். அத்தகைய ஸர்வ ஶக்தி வாய்ந்த தேவியைப் பூஜைசெய். அவள் உனது கவலையைநீக்கி இஷ்டத்தைத் தருவாள் என்றார் மஹர்ஷி. ஸுரதன் அங்ஙனமே மண்ணினால் தேவியின் விக்ரஹத்தைச் செய்து பக்தியுடன் பூஜித்து வந்தான். பூஜையின் முடிவில் தனது ரத்தத்தையே தேவிக்குப் பலியாக தந்தான். அரசனது நியமத்தையும் பக்தியையும் கண்டு ஸந்தோஷம் அடைந்த தேவி அவன் எதிரே தோன்றி வேண்டிய வரத்தைக்கேள் என்றாள். தனது மோஹம் அகன்று க்ஞானம் உண்டாகவும் சத்ருபாதை இல்லாத ராஜ்யம் பெறவும் வேண்டினான் அரசன். தேவி அவைகளைத்தந்து ஸூர்யனது புத்ரனாக நீ ஜநித்து மந்வந்தர அதிபதியாகவும் இருப்பாய் என்ற வரத்தையும் தந்தாள். அவரே வைவஸ்வதமநுவானார்.

பனிரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

---

## பதிமூன்றும் அத்யாயம்.

வைவஸ்வத மநுவுக்கு கரூஷன் ப்ருஷத்ரன் நாபாகன் திஷ்டன் ஶர்யாதி த்ரிஶங்கு என்ற ஆறு புத்ரர்கள் உண்டானார்கள். அவர்கள் யமுனைக்கரையில் தனித்தனியாக மண்மயமான தேவீ விக்ரஹத்தை அமைத்து நியமத்துடன் பூஜைசெய்தார்கள். உலர்ந்த இலை தீர்த்தம் வாயு புகை இவைகளை முறையே ஆஹாரமாகக்கொண்டு சில ஆண்டுகளும், அவைகளையும் விட்டு உபவாஸத்துடன் சில ஆண்டுகளும் உக்ரமாகத் தவம் செய்தனர். அவர்களது மநம் ஶுத்தமாயிற்று. தனக்குள்ளே அத்புத

மாக ஸகலஉலகையும் கண்டனர். பனிரண்டாம் ஆண்டு முடிவிலே ஆயிரம் ஸூர்யனுக்கு ஒப்பான காந்தியுடன் தேவி ப்ரத்யக்ஷமானாள். மநுபுத்ரர் அனைவரும் அன்னையைப்பணிந்து துதித்தார்கள். தேவி உங்களுக்கு வேண்டிய வரனைக்கேளுங்கள் என்றாள்.

அனைவரும் சத்ருவில்லாத ராஜ்யம் நீண்ட ஆயுஸ், ஸந்ததி ஒப்பற்றகீர்த்தி தங்குதடையில்லாத செல்வாக்கு முதலியவைகளை வேண்டினார்கள். தேவி அவைகளைத் தந்து இவர்களை தக்ஷஸாவர்ணி, மேருஸாவர்ணி, ஸூர்ய ஸாவர்ணி, சந்த்ரஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, விஷ்ணு ஸாவர்ணி என்ற மநுக்களாக இருக்கும்படியும் அருள் புரிந்தாள். தேவியை ஆராதித்து அதனால் இப்படிப் பட்ட பாக்யத்தைப்பெற்றவர் பலர் உண்டு. ப்ராமரீ என்ற தேவியின் மஹிமையைக்கேள்.

அருணன் என்ற அஸுரன் ஸகல தேவாஸுரநரர்களையும் ஜயிக்கக்கருதி ஹிமாலயத்தில் கங்காஸ்நாநம் செய்து காயத்ரீ ஜபம் செய்து வந்தான். பத்தாயிரமாண்டு ஜலத்தையும் பத்தாயிரம் ஆண்டு காற்றை உண்டும் பத்தாயிரமாண்டு ஆஹாரமில்லாமலும் உக்ரமாகத் தவம் செய்தான். அவனது உடலிலிருந்து கிளம்பிய தீ உலகைஎலாம் கொளுத்திற்று. அமரரனைவரும் வருந்தி சதுர்முகனைச்சரணம் அடைந்தனர். அவர் காயத்ரியுடன் ஹம்ஸவாஹநம் ஏறி அருணனிடம் வந்து வரத்தைக்கேள் என்றார். அவன் இறவாதிருக்கும்படி வரம் கேட்டான். உடல் எடுத்தவர் இறந்தே ஆகவேண்டும். ஆதலால் வேறு ரெம்கேள் என்றார் ப்ரும்மா. அருணன் ஒப்பற்றபலம், எல்லோரையும் ஜயித்து ஸகல பாக்யங்களையும் அனுபவித்தல், இருகால் உள்ளவராலும் நாலுகால் உள்ளவராலும் ஆணாலும் பெண்ணாலும் ஆயுதத்தாலும் மரணம் இல்லாமை என்ற வரங்களைக் கேட்டான். அங்ஙனமே வரந்தந்து ப்ரும்மா சென்றார்.

தைத்யரனைவர்க்கும் அரசன் ஆனான் அருணன். உடனே "இந்த்ரபதவியைத் தந்து என்னைச் சரணம் அடை, அல்லது போருக்குவா" என தேவேந்த்ரனுக்கு தூது அனுப்பினான். இதைக்கேட்ட சக்ரன் ஸ்வர்க்கத்தை விட்டுத் தனது பரிவாரத்துடன் ப்ரும்மலோகஞ்



சென்றான். அருணன் தான் ஸ்வர்க்கபதியாகி அஸுரர்களை அஷ்டதிக்பாலர்களாக்கினான். தான் பலரூபங்களை எடுத்து சந்த்ர ஸூர்யரது அதிகாரத்தையும் தானே வஹித்தான். தேவர் மூவருடன் கலந்து அவனை எப்படிக் கொல்வது என யோசித்தனர். ப்ரும்மாவின் வரத்தின் படி இருகால் நாலுகால் உள்ளவைகளால் அவனுக்கு மரணமில்லை. என்ன செய்வதென்று கலங்கினர். "புவனேஶ்வரியைச் சரணம் அடையுங்கள். அவன் காயத்ரியை விட்டால் இறப்பான்" என ஒரு அஶரீரி தோன்றிற்று.

இந்த்ரன் குருவை வணங்கி, அருணன் காயத்ரியை விடும்படி செய்யுங்கள் என வேண்டினான். தேவரனைவரும் அஸுர பயத்தை அகற்றக்கூடிய ஜாம்பூநதேஶ்வரீ என்ற அவளருகே சென்று மாயாபீஜத்தை ஜபித்து தேவியாகம் செய்தார்கள். ப்ருஹஸ்பதி அருண அஸுரனிடம் சென்றார். மஹர்ஷே 'எங்குவந்தீர்' நான் உம்மிடம் அன்புள்ளவனல்ல. உமக்கும் உமது சிஷ்யர்களுக்கும் யான் சத்ரு அல்லவா? என்றான் அவ்ன். ராக்ஷஸேந்த்ர! நாங்கள் உபாஸிக்கும் காயத்ரியைத் தான் நீயும் உபாஸிக்கிறாய். ஆதலால் எங்கள்பந்து நீ என்றார் தேவகுரு. இதைக்கேட்டு தேவமாயையால் மோஹம் அடைந்த அருணன் "ஆனால் இனிமுதல் யான் காயத்ரியை ஜபிப்பதில்லை" என அதைவிட்டுவிட்டான். அதனால் அவன் தேஜஸையும் பலத்தையும் இழந்தான். இதை அறிந்த தேவர் பரம ஸந்தோஷம் அடைந்து தேவியைப் பக்தியுடன் உபாஸித்து வந்தனர். தேவி கருணை கொண்டு ஆஶ்சர்யமான வண்டாகத் தோன்றினாள். மற்ற சக்திகணங்களும் தேவியைத் தொடர்ந்து வண்டு வடிவமாகி ஹ்ரீங்கார ஶப்தம் செய்தன. தேவர்கள் "இவள் பராஶக்தி அருணனைக்கொல்ல ஆறுகால்களுடன் அவதரித்திருக்கிறாள்" என அன்னையைத் துதித்தனர்.

தேவி ஸந்தோஷமடைந்து தேவர்கள் வேண்டியபடி அருணனைக்கொல்ல வண்டுகளை ஏவினாள். அதிவிசித்ரமான உருவம்வாய்ந்த கோடிக்கணக்கான வண்டுகள் ஆகாசமெலாம் பரவி பகைவனை நாடிக்கிளம்பின.

அஸுரர் உள்ள இடமெலாம் சென்று அவர்கள் உடலைப் பிளந்து உள்ளே புகுந்து அனைவரையும் கொன்றன. அஸுரர் அஸ்த்ர ஶஸ்த்ரங்களை எடுக்கவோ விடவோ போர்புரியவோ முடியாமல் அந்தந்த இடத்திலும் இருந்த நிலையிலேயே மாண்டனர். ஆநந்தக் கடலில் அமிழ்ந்த அமரர் அன்னையைத் துதித்தனர், முனிவர் வேதம்கூற கந்தர்வர் காநம் செய்ய, அப்ஸரஸ் ஆட, மற்றவர் துதி பாட, எங்கும் ஒரே உத்ஸவம். அவரவர் வேண்டிய வரத்தைத்தந்து தேவி மறைந்தாள். மநுக்களின் சரிதம் தேவியின் மஹிமை இவைகளைப் படிப்பவர் ஸகலஸம்பத்துகளையும் பெறுவர்.

பதிமூன்றும் அத்யாயம் முற்றிற்று.

---

**பத்தாவது ஸ்கந்தம் முற்றிற்று.**

---

## பதினோராவது ஸ்கந்தம்.

### முதல் அத்யாயம்.

நாராயண ரிஷி நாரதருக்கு ஸதாசாரத்தைக்கூறினார். மநிதன் இஹபர நன்மைகளைப் பெறுவதற்கு தர்மமே துணையாகும். மாதா பிதாவும், மனைவி மக்களும் நம்முடன் வரமாட்டார்கள். ஆசாரமே முதல் தர்மமாகும். ஆசாரம் ஆயுளை, ஸம்பத்தை, ஸந்ததியை, அன்னத்தைத் தரும். மனிதருக்கு நன்மையைத்தரும் சிறந்த தர்மம் ஆசாரமே. அக்ஞானமெனும் இருளை அகற்றும் தீபம் தர்மம். ஆசாரத்தால் மேன்மையும், கர்மாவும், கர்மாவால் க்ஞானமும், க்ஞானத்தால் முக்தியும் தோன்றும் என மநு கூறுகிறார். எல்லா தர்மங்களையும்விட சிறந்தது ஆசாரம். ஆசாரமில்லாதவன் சூத்ரனுக்குச் சமமானவன். ஶாஸ்த்ரம் கூறுகின்ற வைதிக ஆசாரம் லௌகிகமான ஆசாரம் இரண்டையும் அனுஷ்டிக்க வேண்டும். ஜாதி தர்மம், குலதர்மம், தேசதர்மம், க்ராம தர்மம், முதலியவைகள் லோகதர்மமாகும்.



துராசாரமுள்ளவன் துக்கமடைவான். நோயாளி ஆவான். ஶ்ருதி ஸ்ம்ருதி இரண்டும் கண்கள். புராணம் ஹ்ருதயமாம். இம்மூன்றிலும் கூறப்படுவது ஸதாசாரம். இம்மூன்றுக்குள் பரஸ்பர விரோதம் தோன்றினால் ஶ்ருதி கூறுவதே ப்ரமாணமாகும். ஸ்ம்ருதிக்கும் புராணத்திற்கும் பேதமேற்பட்டால் ஸ்ம்ருதியே ப்ரமாணமாம். வேதத்திற்குள்ளேயே பேதம் ஏற்பட்டால் இரண்டும் ப்ரமாணமேயாகும். வேதத்திற்கு நேர் விரோதமாகக் கூறும் ஸ்ம்ருதியும் புராணமும் ப்ரமாணமில்லை. வேத தர்மத்தை விட்டவர் நரகம் செல்வர். சாஸ்த்ர ஸம்மதமில்லாததைச் செய்பவரும், இஷ்டமானபடி நடப்பவரும் பாஶுபத பாஷண்டாதிகளும் தப்தமுத்திரை தரிப்பவர்களும் நரகம் செல்வார்கள்.

அன்றன்றும் அதிகாலையில் எழுந்திருந்து நேற்றென்னதானம் செய்தோம், வாக்கினாலாவது ஸஹாயம் செய்தோமா என்று யோசிக்க வேண்டும். பரப்ரும்மம் அல்லது இஷ்டதேவதையை த்யானம் செய்யவேண்டும். பத்மாஸனத்தில் அமர்ந்து ப்ராணாயாமம் செய்யவேண்டும். ஹ்ருதயத்தில் தீபம்போல் ப்ரகாசிக்கும் பகவானை த்யாநம் செய்யவேண்டும். ஸகர்ம அகர்ம ஸகர்ப்ப அகர்ப்ப ஸலக்ஷ்ய அலக்ஷ்யம் என ப்ராணாயாமம் ஆறு வகைப்படும். ரேசக கும்பக பூரகம் என்பது அகார உகார மகார வடிவமான ப்ரணவ ஸ்வரூபமாம். அதே பரமாத்மா.

இடையினால் வாயுவை இழுத்து வயிற்றிலிருந்து பதினாறு மாத்ரைகளால் மெதுவாக விடவேண்டும். இதே ஸகர்ம ப்ராணாயாமம். குண்டலிநியிலிருந்து ஆறு சக்ரங்களிலும் அந்தந்த வர்ண ரூபமாக இருக்கின்ற தேவியை வணங்கவேண்டும். நாம் இருப்பதே தேவியின் ஸேவை. செல்வதே புத்தி. பேசுவதே ஸ்தோத்ரம். நான் ஸர்வ தேவதா ஸ்வரூபீ, எல்லா கார்யங்களும் தேவியின் அர்ச்சனை. உள்ளே செல்லும் மூச்சு ப்ரகாஶமான தேவியின் ஸ்வரூபம். வெளியில் வருவது அம்ருத மயமான தேவி. இப்படி மாநஸிகமான உபசாரங்களால் தேவியைப்பூஜித்து குருர்ப்ரும்மா என்ற ஶ்லோகத்தைக் கூற வேண்டும்.

முதலத்யாயம் முற்றிற்று.

## இரண்டாம் அத்யாயம்.

ஆறு அங்கத்துடன் வேதம் கற்றவராயினும் ஆசாரமில்லாதவரை ரக்கை முளைத்தவுடன் பக்ஷி கூட்டை உதரித்தள்ளுவதுபோல் இறக்கும்போது இவரை அவை விட்டுவிடுகின்றன. காலையில் எழுந்து கொஞ்சம் வேதாப்யாஸம் செய்து இஷ்ட தேவதையை த்யாநம் செய்யவேண்டும். ஐம்பத்தைந்தாவது நாழிகை உஷ:காலம். ஐம்பத்தேழாவது நாழிகை அருணோதயம். ஐம்பத்தெட்டாவது நாழிகை ப்ராத:காலம். அதற்குமேல் ஸூர்யோதயமாம். ப்ராத:காலத்தில் நிருருதி மூலையாகச் சென்று மலஜலங் கழிக்கவேண்டும். ப்ரும்மசாரி பூநூலை வலது காதிலும் க்ருஹஸ்தன் பின்புறம் மாலையாகவும் அணிந்து பூமியில் ஏதேனும் புல்த்ருணங்களைப் போட்டு அதன் மீது பேசாமல் ஜல மல விஸர்ஜநம் செய்யவேண்டும். உழுத பூமி ஜலம் ஸ்மஶாநம் மலை தேவாலயம் புத்து வளை முதலிய இடங்களில் ஜல மலம் கழிக்கக் கூடாது. இரு ஸந்த்யாகாலம் ஜபம் போஜநம் பல் தேய்த்தல் பித்ரு கர்மா தேவபூஜை ஜல மலம் கழிப்பது ஸ்த்ரீ போகம் குரு ஸன்னதி யாகம் தாநம் ப்ரும்மயக்ஞம் இச் சமயங்களில் மௌநமாக இருக்கவேண்டும். "இங்கிருக்கும் பூதங்கள் சிறிது விலகட்டும். நான் ஜல மலங் கழிக்கப்போகிறேன்" என்ற ச்லோகத்தைக் கூறி கை தட்டி பிறகே ஜல மல விஸர்ஜநம் செய்யவேண்டும்.

வாயு அக்நி ப்ராம்மணன் ஆதித்யன் இவர்களுக்கு எதிரே ஜல மலங் கழிக்கக் கூடாது. பகலில் வடக்கு முகமாகவும் இரவில் தெற்கு முகமாகவும் ஜல மல விஸர்ஜநம் செய்யவேண்டும். பாத்ரத்தில் ஜலத்தை எடுத்துக்கொண்டே வெளியில் செல்லவேண்டும். ஜலத்தில் உட்கார்ந்து ப்ரக்ஷாளநம் செய்யக் கூடாது. ஜலத்வாரத்தை ஒரு முறையும் இரு கரங்களை மும்முறையும் இடது கையை மறுபடி இருமுறையும் மண்ணினால் சுத்தம் செய்யவேண்டும். இது ஜலங் கழிப்பதற்கேற்ற விதி. மலங்கழித்தபின் இதை இருமடங்கு அதிகமாகச் செய்யவேண்டும். ப்ரும்மசாரி இவைகளை இரண்டு மடங்கும் வாநப்ரஸ்தன் மூன்றுமடங்கும் ஸன்யாஸி நாலுமடங்கும் அதிகமாக அநுஷ்டிக்கவேண்டும். நோயாளிக்கு நிர்பந்த



மில்லை. துர்நாற்றம் அகலும்வரை சுத்திசெய்தல் வேண்டும். ஸ்த்ரீ சூத்ரர் பாலன் அஶக்தன் இவர்களுக்கும் நாற்றமகலும்வரை சுத்தி போதுமானது.

இடுப்பிற்குக் கீழே உள்ள இடங்களை இடதுகையாலும் மேலே உள்ள இடங்களை வலது கரத்தாலும் சுத்தம் செய்யவேண்டும். மலங் கழித்தபின் பனிரண்டு முறையும் ஜல விஸர்ஜநத்தில் நான்குமுறையும் வாய் கொப்பளிக்கவேண்டும். கீழே குனிந்து இடதுபுறமாக கொப்பளிக்கவேண்டும். ஆசமநம்செய்து பனிரண்டு அங்குலம் நீளமும் சுண்டுவிரல் பெருமனுமுள்ள பற் குச்சியால் பல் துலக்கவேண்டும். ஆல் வேல் அத்தி மா கதம்பம் முதலிய மரங்களின் குச்சி சிறந்தது. குச்சி அகப்படாத போதும் வ்ரத திநங்களிலும் விரலால் குழப்பி பனிரண்டு முறை வாய் கொப்பளிக்க வேண்டும். மரத்திலிருந்து குச்சியை ஒடிப்பதால் அந்த தோஷம் அகல ஆயுர்பலம் என்ற ச்லோகம் கூறவேண்டும்.

ப்ரதமை அமாவாஸ்யை ஷஷ்டீ நவமீ ஏகாதசி பாநு வாரம் ஶ்ராத்ததிநம் முதலிய காலங்களில் பற்குச்சியால் பல் தேய்க்கலாகாது. கை கால்களை அலம்பி ஆசமநம் செய்து இந்த்ரியங்களை ஜலத்தால் ஈறமான விரல்களால் தொட வேண்டும்.

இரண்டாமத்யாயம் முற்றிற்று.

---

## மூன்றுமத்யாயம்.

ப்ரணவத்தையும் காயத்ரியையும் ஸ்மரித்து சிகையைக் கட்டிக்கொள்ளவேண்டும். தும்பல் காரித்துப்பல் பல் எச்சில் பொய் பேசுதல் பதிதருடன் பேசுவது ஆகிய காலங்களில் வலது காதைத் தொடவேண்டும். ஆதில் அக்நி நீர் வேதம் ஸோம ஸூர்யர் வாயு முதலிய தேவர்க்ள் வஸிக்கின்றனர். நதிக்குச் சென்று ப்ராத ஸ்நாநம் செய்யவேண்டும். உடல் மிக அழுக்குள்ளது. ஒன்பது துவாரங்களாலும் மலம் வெளியில் வருகிறது. மலம் அகலவும் தகாதவரைப் புணர்ந்தது தாநம் வாங்கியது ரஹஸ்யமான பாபம் இவைகளை அகற்றவும்

ப்ராத ஸ்நாநம் செய்யவேண்டும். ஸ்நாநம் செய்யாதவர் அநுஷ்டிக்கும் கர்மாக்கள் எல்லாம் வீணுகும். ஏழுநாள் ப்ராத ஸ்நாநம் மூன்றுநாள் ஸந்த்யாவந்தநம் பனிரண்டு நாள் ஔபாஸநம் இதைச் செய்யாதவன் சூத்ரனுவான். ஹோமகாலம் விரைவில் வருவதால் ப்ராதஸ்நாநத்தை விரைவாகச்செய்து ப்ரணவம் வ்யாஹ்ருதி இவைகளுடன் காயத்ரியைக் கூறி ப்ராணுயாமம் செய்யவேண்டும். மந்த்ர ஜபத்துடன் கூடியது ஸகர்ப்பம். அதில்லாதது அகர்ப்ப ப்ராணுயாமம் எனப்படும். ஸங்கல்பம் ஸ்நாநம் ஸ்நாநாங்க தர்ப்பணம் இவைகளைச் செய்து சுத்தவஸ்த்ர மணிந்து விபூதி இட்டுக்கொள்ள வேண்டும். ருத்ராக்ஷ மணியவேண்டும்.

கழுத்தில் முப்பத்திரண்டு ருத்ராக்ஷம். தலையில் நாற்பது. ஒவ்வொரு காதிலும் ஆறு ஆறு. ஒவ்வொரு கரத்திலும் பனிரண்டு பனிரண்டு. ஒவ்வொரு புஜத்திலும் பதினுறு பதினுறு, ஒவ்வொரு கண்ணிலும் ஒவ்வொன்று. சிகையில் ஒன்று. மார்பில் நூற்றெட்டு. ஆக ருத்ராக்ஷம் அணிய வேண்டும். யக்ஞோபவீதத்திலோ கையிலோ கழுத்திலோ வயிற்றிலோ பஞ்சாக்ஷர மல்லது ப்ரணவத்தால் ருத்ராக்ஷத்தைத் தரிக்கலாம். ருத்ராக்ஷம் க்ஞாநஸாதநமாகும். சிகையில் தரிப்பது தாரக தத்வம். இரு கர்ணங்களிலுள்ளது பார்வதீ பரமேச்வரன். பூநூலில் தரிப்பது ப்ரும்ம ஸ்வரூபம். கரங்களில் தரிப்பது திக்தேவதா ஸ்வரூபமாகும். ப்ராம்மணர் மந்த்ரத்தைக் கூறியே ருத்ராக்ஷ மணிய வேண்டும். மற்ற வர்ணத்தாருக்கு மந்த்ரம் அவச்யமில்லை.

ஸகலவிதமான பாபமும் ருத்ராக்ஷம் தரிப்பதால் அகலும். ருத்ராக்ஷந்தரிக்க வெட்கப்பட்டால் நற்கதி உண்டாகாது. ருத்ராக்ஷதாரியின் பாதஜலத்தை அருந்துவோர்க்கே நற்கதி என்றுல் தாரணம் செய்பவர் பற்றி கூறவேண்டுமா? எப்படியாவது யாராவது ருத்ராக்ஷ மணிந்தாலும் அவன் ருத்ரனே யாவான். ருத்ரலோகம் செல்வான்.

மூன்றுமத்யாயம் முற்றிற்று,

---



## நான்காம் அத்யாயம்.

ஷண்முகனுக்குப் பரமசிவன் கூறியபடி நாராயண ரிஷி நாரதருக்கு ருத்ராக்ஷ மஹிமையை வர்ணித்தார். த்ரிபுராஸுரன் தேவ ப்ராம்மண ரிஷிகளை ஹிம்ஸித்து வந்தான். அவனைக் கொல்வதற்காக ஶிவன் அகோர மெனும் அஸ்த்ரத்தை நினைத்தார். ஆயிரமாண்டு அதைச் சிந்தித்திருந்தார். பிறகு கலங்கிய அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொட்டிற்று. அதிலிருந்து ருத்ராக்ஷம் என்ற வ்ருக்ஷம் தோன்றி முப்பத்தெட்டு வகையான ருத்ராக்ஷங்களை உண்டுபண்ணிற்று. ஶிவனது ஸௌர்ய வடிவமான கண்ணிலிருந்து கபில வர்ணமான பனிரண்டு வகை ருத்ராக்ஷங்கள் தோன்றின. சந்த்ரமயமான நேத்ரத்திலிருந்து வெண்மையான பதினுறுவித ருத்ராக்ஷங்கள், அக்நிமயமான நெற்றிக்கண்ணிலிருந்து பத்துவ்கை உண்டாயின. முறையே இவை ப்ராம்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ர வர்ணமாகும்.

ஏக முக ருத்ராக்ஷம் ஸாக்ஷாத் ஶிவ ஸ்வரூபம். ப்ரும்மஹத்தியைப் போக்கும். இரண்டு முகம் தேவியும் தேவனுமாம். இருவகை வினைகளை நீக்கும். மூன்றுமுகம் அக்னிஸ்வரூபம். ஸ்த்ரீஹத்தி தோஷத்தை அகற்றும். நான்கு முகம் ப்ரும்மமயம். நரஹத்தியை அகற்றும். ஐந்து முகம் காலாக்நிருத்ரன் எனும் பரமசிவ ஸ்வரூபம். தகாததைப் பக்ஷித்தது, தகாதவரைப் புணர்ந்தது என்ற பாபத்தைப்போக்கும். ஆறுமுகம் கார்த்திகேயன். வலது கரத்தில் தரித்தால் ப்ரும்மஹத்யாதி பாபமகலும். ஏழு முகம் அநங்கன் எனப்படும். ப்ரும்மஹத்யாதி பாபத்தை அகற்றும். எட்டு முகம் விநாயக ஸ்வரூபம். அன்னமலை பஞ்சுபொதி, ஸ்வர்ணமலை இவைகளைத் திருடிய பாபமும் நீசஸ்த்ரீ, குருஸ்த்ரீ ஸங்க தோஷமும், இதனுல் நீங்கும். ஒன்பது முகம் பைரவ ரூபம். அது புக்தி முக்திகளைத் தரும். ப்ரூணஹத்யாதிகளைப் போக்கும். பத்து முகம் ஜநார்த்தனஸ்வரூபம். பூதப்ரேத பைசாசங்களை அகற்றும். பதினொரு முகம் ஏகாதச ருத்ரஸ்வரூபம். அது பல அஶ்வமேத ராஜஸூய யாக பலனைத் தரும். கோடி கோதான பலனைத் தரும். பனிரண்டுமுக ருத்ராக்ஷத்தை

125384



ஐந்து காதில் தரித்தால் த்வாதசாதித்யர் கோமேத அஸ்வமேத பலனைத் தருவர். புலிபயம் வ்யாதி பயம் முதலியவைகள் அவனை அணுகாது.

பதிமூன்றுமுக ருத்ராக்ஷம் ஷண்முகனுக்கு ஸமமானது. அதைத் தரித்தால் ரஸஸித்தி, ரஸாயன ஸித்தி முதலியன உண்டாகும். பித்ருஹத்தி, மாத்ருஹத்தி முதலிய பாபங்களும் அகலும். பதிநான்கு முகமுள்ள ருத்ராக்ஷம் கிடைத்தால் அதைத் தலையில் தரிக்கவேண்டும். அதைத் தரிப்பவர் உடல் ஸாக்ஷாத் ஶிவன் வஸிக்கும் இடம். தலையில் இருபத்தாறு, மார்பில் ஐம்பது, இரு பாஹுக்களிலும் பதினாறு பதினாறு, கைகளில் பனிரண்டு பனிரண்டு, ஶிரஸ்ஸில் ஒன்று. மார்பில் நூற்றெட்டு அல்லது ஐம்பது அல்லது இருபத்தேழு ருத்ராக்ஷம் தரித்துக்கொண்டால் ஒவ்வொரு க்ஷணத்திலும் ஒவ்வொரு அஸ்வமேதயாகம் செய்த புண்யம் உண்டாகும். இருபத்தோரு தலைமுறை முன்னோர்களுக்கும் நற்கதியுண்டாகும்.

நான்காம் அத்யாயம் முற்றிற்று.

---

## ஐந்தாம் அத்யாயம்.

ருத்ராக்ஷத்தின் முகம் ப்ரும்மா. த்வாரம் ருத்ரன். அடிபாகம் விஷ்ணு. இப்படி த்யாநம் செய்து அதைத் தரித்தால் போகமும் மோக்ஷமும் உண்டாகும். ஐந்து முகமுள்ளதும் மேலே முள்ளுபோல் சொர சொரப் புள்ளதுமான ருத்ராக்ஷங்களில் இருபத்தைந்தால் ஜபமாலை அமைக்க வேண்டும். ருத்ராக்ஷத்தின் முகம் முகத்துடனும் பின்புறம் பின்புறத்துடனும் சேர்த்துத் தொடுக்க வேண்டும். நடுவில் ஒன்றை மேல்முகமாக வைக்க வேண்டும். அது மேரு எனப்படும். சந்தன ஜலம் பஞ்சகவ்யம் சிவஜலம் இவைகளால் அலம்பி ஶிவஶக்தி மந்த்ரங்களால் ந்யாஸம் செய்யவேண்டும். அஸ்த்ர மந்த்ரத்தால் தொட்டு கவசத்தால் மறைத்து மூலமந்த்ரத்தால் மந்திரித்து ஸத்யோஜாதாதிகளால் ப்ரோக்ஷித்து நூற்றெட்டு முறை மூலமந்த்ரம் ஜபித்து அதில் பார்வதீ பரமேச்வரர்களை ப்ரதிஷ்டை செய்யவேண்டும், இப்படிச் செய்த மாலையால் ஜபம்செய்தால் உடனே மந்த்ர ஸித்தி உண்டாகும்.

*House for Quality Watches*

# LAKSHMI WATCH CO.,

DIRECT IMPORTERS & GOVT. SUPPLIERS

58, THAMBU CHETTY STREET, G T. MADRAS.

---

**8 DAYS WALL REGULATORS**

SUPERIOR ENGLISH MAKE

SMITH ENFIELD, BIG SIZE,

BIM BAM CLOCKS

**Rs. 150/- each.**

**OURS FOR QUALITY**

SALES COMBINED WITH SERVICE.

---

SUPERIOR 4" DIAL

"INGRAHAM" BASE MODEL ALARAM.

Made in U. S. A.

**Rs. 20. EACH.**

---

**ஆத்மார்ப்பண ஸ்துதி.**

அப்பைய தீக்ஷிதேந்த்ராள் அருளிய ஸம்ஸ்க்ருத கண்டமங்கலம் மு. பாலஸுப்ரமண்ய ஐயரால் ...பட்ட சிவபோதினீ எனும் தமிழ் பதவுரையும், ...ரையும் அடங்கியது.

விலை ரூ. 1—8—0

எங்களிடம் கிடைக்கும்

தபால் சிலவு தனி.

ஸ்தாபிதம் : 1929

அசல் வைரங்கள் ஜகஜ்ஜோதி வைரங்கள்



பூரிப்பிலும் உழைப்பிலும் வைரத்துக்கு— ஒப்பானது

K. RAMACHANDRA IYER,

*Director* : T. Nagar Bank Ltd., T. Nagar, Madras-17

*Appraiser* : Indo-Commercial Bank Ltd., T. Nagar, Madras.

எங்களிடம் சிறிய மூக்குத்தி முதல் நெக்லேஸ் வரை கல் வைத்த நகைகளும், 2 ஸாவரன் எடை முதல் நவ நாகரீகமான பவுன் மாங்காமாலை, மல்லி மொக்குமாலை, சிறிய காசுமாலை, மற்றுமுள்ள வளையல், செயின் தினுசுகளும் பவுனுக்கு 4 ஜதை முதல் கவரிங் வளையல், செயின் வகையறாக்களும் கைவசமும், ஆர்டரின் பேரிலும் கிடைக்கும்.

கலியாண காலங்களுக்கு வேண்டிய வெள்ளிக் குடம், கூஜா, குத்துவிளக்கு முதலான சாமான்களும், பிரஸன்டேஷனுக்கு வேண்டிய அழகிய வெள்ளி பாத்திரங்களும், கால் செயின் வகைகளும் கியாரண்டியுடன் கிடைக்கும்.

வைரநகை கட்டடங்கள் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு, சொந்த மேற்பார்வையில் நேர்த்தியாய்க் கட்டிக்கொடுக்கப்படும்.

பூஜைக்கு உரியதான வினாயகர், லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஷண்முகர், ராதாகிருஷ்ணன், ராமர்பட்டாபிஷேகம், காயத்ரீ, ஸ்ரீராஜராஜேஸ்வரி முதலான வெள்ளிப் படங்களும் விக்ரஹங்களும், வரலக்ஷ்மி முகமும் மொத்தத்திலும் சில்லரையிலும் கிடைக்கும்.

**கே. ராமசந்திரஅய்யர் அண்டு கம்பெனி**

**வைரம், பவுன், வெள்ளி நகை வியாபாரிகள்,**

**ஸ்ரீராதாகிருஷ்ண மான்ஷன் — தியாகராயநகர், சென்னை-17**


Printed by Sri A. Venkataraman at The Sri Meenakshi Press, Sirkali.
& Published by Sri N. V. Subramanian, "Vaidhika Dharma Vardhini,"
at 2/218, Thambu Chetty St., G. T. Madras.